மார்க்க அறிவுப் புத்தகம்
(தொடர்-3)
- - சிறுவர் பகுதி - -
பக்கம் 5

முனாஃபிக்(நயவஞ்சகர்)களை அடையாளம் காண்பதும் எதிர்கொள்வதும் எப்படி?
பக்கம் 7

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-13)
பக்கம் 13

இறைஇருப்பு, இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிகள் (தொடர்-1)
பக்கம் 19


மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | January 2023 | Vol. 2 - Issue No. 2



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340






# திருக்குர்ஆன்

إِذَا جَآءَكَ الْمُنٰفِقُوْنَ قَالُوْا نَشْهَدُ
إِنَّكَ لَرَسُوْلُ اللّٰهِ ۘ وَاللّٰهُ يَعْلَمُ إِنَّكَ
لَرَسُوْلُهٗ ؕ وَاللّٰهُ يَشْهَدُ إِنَّ الْمُنٰفِقِيْنَ
لَكٰذِبُوْنَ ۚ

நயவஞ்சகர்கள் உம்மிடம் வரும்போது, நிச்சயமாக நீர் அல்லாஹ்வின் தூதராவீர் என்று நாங்கள் (சத்தியம் செய்து) சாட்சி பகர்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். நிச்சயமாக நீர் அல்லாஹ்வின் தூதர்தாம் என்று அவன் அறிவான். ஆனால், நிச்சயமாக நயவஞ்சகர்கள் பொய்யர்களேயாவர் என்று அல்லாஹ் (சத்தியம் செய்து) சாட்சி பகர்கின்றான். (63:2)



# ஹதீஸ்

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو، أَنَّ النَّبِيَّ صلى الله عليه
وسلم قَالَ " أَرْبَعٌ مَنْ كُنَّ فِيهِ كَانَ مُنَافِقًا خَالِصًا،
وَمَنْ كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنْهُنَّ كَانَتْ فِيهِ خَصْلَةٌ
مِنَ النِّفَاقِ حَتَّى يَدَعَهَا إِذَا أُؤْتُمِنَ خَانَ
وَإِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا عَاهَدَ غَدَرَ،
وَإِذَا خَاصَمَ فَجَرَ ".

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“எவரிடம் பின்வரும் நான்கு பண்புகள் இருக்கின்றதோ அவர் ஒரு நயவஞ்சகர் ஆவார். எவரிடம் அவற்றுள் ஒரு பண்பு உள்ளதோ அவர் அதிலிருந்து வெளியேறும் வரை அவரிடம் நயவஞ்சகப் பண்பு உள்ளது. (1) அவர் உடன்படிக்கை செய்தால் அதில் துரோகம் செய்கிறார். (2) அவர் பேசும் போது பொய் கூறுகிறார். (3) அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை. (4) அவர் வாதிட நேர்ந்தால் கடுமையான சொற்களைப் பயன்படுத்துகிறார்.”

(புகாரி அதிகாரம் ஈமான், ஹதீஸ் எண்: 34)

# புத்தாண்டு சிந்தனைகள்!

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 30.12.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து....**

முஸ்லிம்கள் புத்தாண்டை சந்திர காலண்டர் மற்றும் கிரிகோரியன் காலண்டர் மூலம் தொடங்குகிறார்கள். சந்திர காலண்டர் முன்னர் பல நாடுகளில் பல மார்க்கங்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது முழு உலகிலும் எல்லா நாடுகளும் மாதங்களையும் நாட்களையும் கணக்கிட கிரிகோரியன் காலண்டரைப் பயன்படுத்துகின்றனர்.

- உலக மக்களின் புத்தாண்டு தொடக்கம் முழு உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. அவர்கள் இரவு முழுவதும் விழித்திருந்து பார்ட்டிகளிலும் மது அருந்துவதிலும் பொழுதைக் கழிக்கின்றனர்.
- ஓர் உண்மையான இறை நம்பிக்கையாளரின் சிறப்பு இப்படிப்பட்ட விஷயங்கள் மீது வெறுப்பை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் கடந்த ஆண்டை சுய தணிக்கை செய்து மதிப்பீடு செய்வதும் ஆகும்.
- ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமது செயல்கள் மற்றும் நமது ஆன்மீகத்தை சுய மதிப்பீடு செய்வதற்காக உயர் தரங்களை நமக்குக் காட்டித் தந்துள்ளார்கள்.
- கடந்த ஆண்டின் கடைசி இரவையும் புத்தாண்டின் புதிய நாளையும் நமது ஆன்மீக நிலைகளைச் சிந்தித்தவாறு, அல்லாஹ்விடம் துஆ செய்தவாறு கழித்தால் அதன் பின்னர் உண்மையாகவே நல்ல ஒரு வாழ்விற்காக நாம் பாடுபட முடியும்.
- ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்: “அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் பிரகடனம் செய்வது என்பது உள்ளத்தில் ஏராளமான சிலை–களை வைத்துக் கொண்டு வெறுமனே வாயால் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதால் மட்டும் நிறைவேறி விடாது. எவர் தனது வேலை, தனது ஏமாற்றும் திறன், தனது தந்திரம் போன்றவற்றிற்கு அல்லாஹ்விற்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்–துவத்தைக் கொடுப்பாரோ அல்லது ஏதாவது ஒரு தேவைக்காக இறைவனைத் தவிர ஏதாவது ஒரு நபரைச் சார்ந்து நிற்பாரோ அல்லது அல்லாஹ்வைப் புகழும் அளவிற்கு (தன் மீது) தற்புகழ்ச்சி கொள்வாரோ இந்த அனைத்து நிலைகளிலும் அவர் ஷிர்க் செய்கிறார்.”
- ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்: “உண்மையைப் பேசுவது மிகவும் விலை உயர்ந்தது. சரியான சாட்சியம் என்பது ஒருவரது வாழ்வு, செல்வம் அல்லது கௌரவம் ஆபத்தில் இருக்கும் நேரம் செய்யப்படுவதாகும்.”

☛ கடந்த ஆண்டு பொய்யிலிருந்து பாதுகாப்பதற்கும் உண்மையின் வழியில் செல்வதற்கும் செலவிடப்பட்டதா என்பதைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்?


❖ உண்மையிலிருந்து விலகிச் செல்ல நம்மைத் தூண்டுகின்ற ஒவ்வொரு சூழ்நிலையையும் நாம் தவிர்க்க வேண்டும் என்று இதற்கான தர நிலையை வாக்களிக்கப் – பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அமைத்துள்ளார்கள்.

☛ தவறான எண்ணங்களுக்கு இட்டுச் செல்லும் நிகழ்வுகளில் இருந்து நம்மை விலக்கிக் கொண்டோமா?

❖ நாம் அநாகரிகமான திரைப்படங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றோம் என்றால் நாம் செய்த உறுதிமொழியிலிருந்து நம்மைத் திசை திருப்புகிறோம். என்றால் நமது நிலைமை கவலைக்குரியதாகும். இந்த விஷயங்கள் ஒருவரை ‘ஜினா’ (விபச்சாரம்) நோக்கி இட்டுச் செல்கின்றன.

☛ எல்லா வகையான தீங்குகளிலிருந்தும் நம்மை நாம் பாதுகாத்துக் கொண்டோமா?

❖ ஒருவரது கையளவு சிறிய நிலத்தை ஆட்கொள்வது அல்லது ஒருவரது சிறிய கல்லை சட்டத்திற்குப் புறம்பாக எடுத்துச் செல்வது கொடுமை மற்றும் தவறான நடத்தை என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.





☛ எல்லா வகையான விஷமத்தனத்திலிருந்தும் நாம் நம்மை பாதுகாத்துக் கொண்டோமா?

❖ மிகவும் விஷமத்தனமானவர்கள் கட்டுப்படாதவர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

☛ எல்லா வகையான குழப்பங்களிலிருந்தும் நம்மை நாம் பாதுகாத்துக் கொண்டோமா?

❖ இன்றைய உலகில் குழப்பம் எங்கும் இருக்கும்போது அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதும் ஒரு வகையான ஜிஹாதே ஆகும்.

☛ வஞ்சகச் செயல்களிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொண்டோமா?

❖ உங்களுக்கு துரோகம் செய்பவர்களைக் கூட ஏமாற்றி விடாதீர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

☛ கடந்த ஆண்டில் ஒவ்வொரு நாளும் ஐந்து முறை தொழுது வந்தோமா?

❖ தொழுகையை விட்டு விடுவது ஒருவரை சிலை வணக்கத்திற்கும் நிராகரிப்பிற்கும் இட்டுச் செல்லும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

☛ நாம் தஹஜ்ஜுது தொழுகை தொழுது வந்தோமா?

❖ தஹஜ்ஜுது தொழுகை தூய்மையானவர்கள் மற்றும் நல்லடியார்களின் வணக்கமுறை. எனவே அதனை தொடர்ந்து தொழுது வருவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

☛ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதற்கு பழக்கமாக வைத்திருந்தோமா?

❖ ஏதாவது ஒன்றிற்காக துஆ செய்யும் போது தரூது ஓதா விட்டால் அந்த துஆ விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையில் நின்று விடும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

☛ நாம் அதிகமாக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டு வந்தோமா?

❖ அல்லாஹ்விடம் தவறாமல் தவ்பா செய்து பாவமன்னிப்புத் தேடுபவன் எல்லா கஷ்டங்களிலிருந்தும் விடுபடு–வதற்கான வழிவகைகளை அல்லாஹ் ஏற்படுத்தி விடுகின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்–ளார்கள்.

☛ நாம் நல்ல பழக்கங்களின் உயர் தரத்தை அடைய முயற்சி செய்தோமா?

❖ நபி (ஸல்) அவர்கள் எளிமையின் நிலையில் தம்மை வாழ வைக்குமாறும் எளிமையான நிலையில் தம்மை மரணிக்கச் செய்யுமாறும் நியாயத் தீர்ப்பு நாளில் பணிவுமிக்கவர்–களோடு தம்மைச் சேர்த்தருளுமாறும் பிரார்த்தனை செய்துள்ளார்கள்.

☛ வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கீழ்ப்படிவதைக் குறித்து உங்கள் குழந்தைகளிடம் துஆ செய்தவாறு நினைவூட்டி வந்தீர்களா?

☛ மற்றெல்லா உறவுகளும் இரண்டாம் பட்சமாக மாறிவிடும் அளவிற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கட்டுப்படுவதில் உயர் தரத்தை நாம் அடைந்து விட்டோமா?

☛ கிலாஃபத்துடன் பற்றுடனும் கட்டுப்படுதலுடனும் இருப்பதற்கு நாம் துஆ செய்து வந்தோமா?

☛ நாம் கலீஃபாவிற்காகவும் ஜமாஅத்திற்காகவும் தொடர்ந்து துஆ செய்து வந்தோமா?

☛ அனைத்து பெற்றோர்களும் கிலாஃபத்தின் முக்கியத்–துவத்தைத் தமது குழந்தைகளுக்கு நினைவூட்டி அதனுடன் பற்றுடன் இருக்க வழிகாட்டினார்களா?


❖ மேலே குறிப்பிட்டுள்ள கேள்விகளுக்கு பதில் நேர்மறை–யானதாக இருந்தால் சில பலவீனங்கள் இருந்த போதிலும் கடந்த ஆண்டில் நாம் நிறைய பெற்றுள்ளோம் என்று பொருள்.

❖ பெரும்பாலான கேள்விகளுக்கு எதிர்மறையாக பதில் அளிக்கப்பட்டிருந்தால் அப்போது நாம் நம்மைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

❖ நாம் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்து, நமது பலவீனங்களைக் களைந்து வரும் அதிகபட்ச வெற்றியை அடைய உதவுவானாக என்று புத்தாண்டின் தொடக்கத்தில் உங்களுக்கு நீங்களே உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள்!

(தொகுப்பு : அபூ அப்துல்லாஹ்)

“எல்லா மக்களும் சமமாகப் பிறந்தவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் சாதி, மதம் அல்லது நிறத்தின் அடிப்படையிலான அனைத்து வகையான பாகுபாடுகளுக்கும் நாங்கள் எதிரானவர்கள்.” – (ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...)



# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




**தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்**

## 1. இஸ்லாம்

41. பணம், தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மீது வருடத்திற்குச் செலுத்த வேண்டிய ஸக்காத் சதவீதம் என்ன?

மொத்தத்தில் 2.5 சதவீதம் ஆகும்.

42. எந்தந்த நோக்கத்திற்காக ஸக்காத் பயன்படுத்தப் -படுகிறது என்பதில் சிலவற்றைக் கூறுக.

பின்வரும் பிரிவைச் சேர்ந்தமக்களுக்காக ஸக்காத்தைப் பயன்படுத்துகிறோம்:

*i)* ஏழைகளுக்காக

*ii)* உழைத்து சம்பாதித்தும் தமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதவர்களுக்காக

*iii)* ஸக்காத்தை வசூலிப்பவர், கணக்குப் பார்ப்பவர், மேலும் இப்பணியில் ஈடுபட்டிருப்போர்

*iv)* பண உதவி தேவைப்படும் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்களுக்காக

*v)* விடுதலை வாங்க இயலாத அடிமைகள், கைதிகளை விடுவிப்பதற்காக

*vi)* வியாபாரத்தில் நஷ்டமடைந்தவர்கள் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாதவர் -களுக்காக

*vii)* தமது பிரயாணத்தைத் தொடர போதிய பணவசதி இல்லாதவர்கள் அல்லது கல்வியைத் தேடும் பணியில் ஈடுபட்டவர்களுக்காக

*viii)* முஸ்லிம்களின் நலனை மேம்படுத்துவதற்காக.

### ஹஜ்

43. 'ஹஜ்' என்றால் என்ன?

ஒருவர் உடல் நலம் பெற்றவராகவும், போதிய பணவசதி உடையவராகவும் இருந்து பாதுகாப்பான பிரயாண வசதியுமிருந்தால் தம் வாழ்வில் ஒருமுறையேனும் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் மக்காவிற்கு புனித யாத்திரை செல்வதை "ஹஜ்" என்கிறோம்.:



44. 'உம்ரா' என்றால் என்ன?

ஹஜ் அல்லாத நாட்களில் 'இஹ்ராம்' உடைய நிலையில் மக்காவை தரிசித்து 'தவா..ப்' மற்றும் 'ஸயீ' நிறைவேற்றி 'தல்பியா' -வைப் பறைசாற்று -வதற்கு 'உம்ரா' என்றழைக்கப்படும்.

45. 'ஹஜ்' உடைய செயல்கள் யாவை?

ஹஜ் உடைய செயல்கள் பின்வருமாறு:

*i)* இஹ்ராம் அணிதல்.

*ii)* 'தல்பியா' வை ஓதுதல்.

*iii)* 'துல்ஹஜ்' மாதம் ஒன்பதாவது நாள் பிற்பகலி லிருந்து சூரிய அஸ்தமனம் வரை மக்காவில் தங்கியிருத்தல்.

*iv)* 'துல்ஹஜ்' மாதம் 10-ம் தேதியிலிருந்து 12-ம் தேதி வரை 'தவா..ப்' -ஐயும் 'ஸயீ'-ஐயும் நிறைவேற்றுதல்.

*v)* 'துல்ஹஜ்' மாதம் 10-ம் தேதி குர்பானி கொடுத்தல் ஆகியவையாகும்.

46. 'இஹ்ராம்' என்பது என்ன?

'ஹஜ்' அல்லது 'உம்ரா' செய்யும் ஒவ்வொரு புனித யாத்திரிகரும் இரு தைக்காத துணிகளை அணிந்து கொள்வர். இந்த ஆடையையே 'இஹ்ராம்' என்கிறோம்.

47. ‘தல்பியா’ என்பது என்ன?

பின்வரும் மறுமொழியை மீண்டும் மீண்டும் உரைப்பதற்கு ‘தல்பியா’ என்று பெயர்.

இதன் பொருள்:

“இதோ நானிருக்கிறேன்.
அல்லாஹ்வே! இதோ நானிருக்கிறேன்.
இதோ நானிருக்கிறேன்.
உனக்கு எவ்வித இணையுமில்லை.
இதோ நானிருக்கிறேன்.
எல்லாப் புகழும் அருளும் உன்னுடையதே.
அரசாட்சி உனக்கே உரியது.
உனக்கு எவ்வித இணையும் இல்லை.”

48. ‘தவா∴ப்’ எனறால் என்ன? அது எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது?

ஒருவருடைய வலது புறம் கருப்புக்கல் இருக்கும் நிலையில் துவங்கி கஅபாவை ஏழு முறை சுற்றி வருவதை ‘தவா∴ப்’ என்கிறோம். ஒவ்வொரு சுற்றின் முடிவிலும் முடிந்தால் கருப்புக் கல்லை முத்தமிட வேண்டும்.



## ஸயீ

49. ‘ஸயீ’ என்றால் என்ன?

ஒரு புனித யாத்ரிகர் ‘ஹஜ்’ அல்லது ‘உம்ரா’ செய்யும் போது ‘ஸபா’ மற்றும் ‘மர்வா’ ஆகிய இரு குன்றுகளுக்குமிடையே மெதுவாக ஓடுவதை ‘ஸயீ’ என்கிறோம்.

50. ‘கஅபா’ என்பது என்ன?

இவ்வுலகில் இறைவனை வணங்குவதற்காக முதன் முதலில் கட்டப்பட்ட வீடு ‘கஅபா’ என்கிறோம். இதனைக் கட்டியவர் யார் என்பது நமக்குத் தெரியாது. எனினும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் அவர்களுடைய மகன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோர் இதனைப் புதுப்பித்தார்கள் என்ற விபரம் திருக்குர்ஆன் வாயிலாக அறிகிறோம். உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் தொழுகையின்போது இந்தக் கஅபாவை நோக்கியே முகம் திருப்புகின்றனர்.

51. ஒரு முஸ்லிமுக்கு விலக்கப்பட்ட உணவு யாது?

ஒரு முஸ்லிம் ‘ஹலாலான’, ‘தய்யிப்’ ஆன உணவையே உண்ண வேண்டும். இரத்தம், தானாகச் செத்தவற்றின் இறைச்சி, அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறப்பெற்றவை, பன்றியின் இறைச்சி ஆகியன ஒரு முஸ்லிமுக்கு விலக்கப்பெற்றவை (ஹராம்) ஆகும். மதுவும் அனைத்து போதை வஸ்துக்களும் ஒரு முஸ்லிமுக்கு விலக்கப்பெற்றவை ஆகும்.

52. ‘ஹலால்’ ஆன உணவு (ஆகுமாக்கப்பட்ட உணவு) என்றால் என்ன?

இஸ்லாமியச் சட்டப்படி தயாரிக்கப்பட்ட உணவு - ஆகும்.

53. ‘தய்யிப்’ ஆன உணவு என்றால் என்ன?

‘தய்யிப்’ என்றால் ‘சிறந்தது’, “ஏற்றுக் கொள்ளத் - தக்கது’, ‘சுத்தமானது’, ‘முழுமையானது’ என்று பொருள்படும். ஒரு மனிதனின் ஆரோக்கியத்திற்கோ ஒழுக்கத்திற்கோ கேடுவிளைவிக்காத உணவு ஆகும்.

54. ஒரு முஸ்லிம் பிறரைச் சந்திக்கும்போது என்ன கூறுகிறார்?

‘அஸ்ஸலாமு அலைக்கும்’ (உங்கள் மீது சமாதானம் நிலவுவதாக!) என்று கூறுகிறார். இதற்கு அவர் ‘வஅலைக்கும் ஸலாம்’ (உங்கள் மீதும் சமாதானம் நிலவுவதாக!) என்று பதில் கூறுகிறார்.

55. ஒரு முஸ்லிம் எந்தவொரு வேலையையும் துவங்கும் முன்பு என்ன கூறுகிறார்?

‘பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்’ என்று கூறுகிறார். இதன் பொருள்: ‘அளவற்ற அருளாளனும் மீண்டும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்’ என்பதாகும்.

56. ஒரு முஸ்லிம் உணவு உண்ட பின் என்ன பிரார்த்தனை செய்கிறார்?

‘அல்ஹம்துலில்லாஹில்லதீ அத்அமனா வஸகானா வஜஅல்னா மினல் முஸ்லிமீன்’ என்று துஆச் செய்கிறார். இதன் பொருளாவது, ‘எனக்கு உண்ணவும் பருகவும் உணவளித்து என்னை முஸ்லிமாகவும் ஆக்கிய அல்லாஹ்விற்கே எல்லாப்புகழும்’ என்பதாகும்.

57. நாம் ஒருவரிடமிருந்து அன்பளிப்போ, உதவியோ பெறும் போது என்ன கூற வேண்டும்?

‘ஜஸாகுமுல்லாஹு கைர்’ என்று கூற வேண்டும். இதன் பொருள்: ‘அல்லாஹ் உங்களுக்கு வெகுமதி அளிப்பானாக’ என்பதாகும்.

*(தொடர்ச்சி 17 ஆம் பக்கம்...)*

# முனாஃபிக்குகள்: நயவஞ்சகத்தை அடையாளம் காண்பதும் எதிர்கொள்வதும் எப்படி?

ரிஸ்வான் கான், முபல்லிக், கனக்டிகட், U.S.A.


**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

முனா∴பிகத் - நயவஞ்சகம் - இஸ்லாத்தில் ஒரு புதிய தலைப்பு அல்ல. கிலா∴பத்தே ராஷிதாவின் போது சீர்குலைவுகளுக்கு மூலகாரணமாக இருந்தது முனா∴பிகத் தான். மேலும் முஸ்லிம்களின் ஒற்றுமையை உடைத்தது கா∴பிர்கள் அல்ல. மாறாக முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை உடைத்தவர்கள் கலீ∴பாவிடம் பைஅத் செய்திருப்பதாகக் கூறிக் கொண்டு முதுகுக்குப் பின்னால் அவரை எதிர்த்த நயவஞ்சகர்களே ஆவர்.

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் குல∴பாயே ராஷிதீன் பற்றிய தமது ஜுமுஆ உரைகளில் குறிப்பாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கிலா∴பத்தின் போது ஏற்பட்ட குழப்பங்களைக் குறித்து விரிவாக விளக்கிக் கூறினார்கள். நாம் அவற்றிலிருந்து படிப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக வரலாற்றிலிருந்து இந்தப் பாடங்கள் நமக்குக் கற்பிக்கப்படுகின்றன.

முனா∴பிக்குகள் (நயவஞ்சகர்கள்) ஒவ்வொரு இறை ஜமாத்திலும் இருப்பர். இன்று இந்தக் குழப்பத்தை மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. ஆரம்ப கால இஸ்லாமிய வரலாற்றில் நடந்த சீர்குலைவுகளுக்கு காரணம் முனா∴பிக்குகளைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாததேயாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “ஜமாஅத்தில் உள்ள சில அறிவீனர்கள் முனா∴பிக்குகளின் ஒழுங்கீனத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இந்த ஜமாஅத்தை இறைவன் பாதுகாப்பான் என்று கூறுகிறார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் புதல்வர்களில் ஒரு மோசமான நபர் செய்த செயலை அவர்கள் பார்க்கவில்லையா? அன்றைய முஸ்லிம்களும் இஸ்லாத்தின் பாதுகாவலன் இறைவன் என்றே நினைத்தார்கள். மேலும் குழப்பங்களை எதிர்ப்பதில் அலட்சியம் காட்டினார்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகளை நினைத்து ஒவ்வொரு முஸ்லிமும் இன்று வரை கண்ணீர் வடிக்கிறார்.” (குத்பாத்தே மஹ்மூது 27 ஜூலை 1956 பக்கம் 319-320)



பதிலளிக்க வேண்டிய முக்கியமான கேள்விகள் என்னவென்றால், எதனால் ஒருவர் முனா∴பிக் ஆகிறார்? அவர்களை எப்படி அடையாளம் காணலாம்? நாம் அவர்களைச் சுட்டிக் காட்ட முடியுமா? நாம் அவர்களைச் சுட்டிக் காட்ட வேண்டுமா என்பவையாகும். முனா∴பிக்குகளின் வகைகளை முதலில் காண்போம்.

### 1. நம்பிக்கை கொண்டவர்கள், ஆனால் ஈமானை இழந்தவர்கள்.

முனா∴பிக்குகளின் ஒரு வகையினர் முதலில் நம்பிக்கை கொண்டவர்கள். பின்னர் ஈமானை இழந்தவர்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

“எந்த சாக்குப்போக்கும் கூறாதீர்கள். நீங்கள் முதலில் நம்பிக்கை கொண்டீர்கள். பின்னர் நிராகரித்து விட்டீர்கள்.” (9:66)

இந்த வசனம் கூறுவது என்னவென்றால் அவர்கள் ஒரு கட்டத்தில் உண்மையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒரு சமயத்தில் கலீ.ஃ.பாவை நம்பினார்கள். பைஅத்தும் செய்தார்கள். ஆனால் பின்னர் அவர்கள் நம்பிக்கையை இழந்து கலீ.ஃ.பாவை மறைமுகமாக எதிர்க்கத் தொடங்கினார்கள்.

ஒருவர் ஒரு மார்க்கத்தின் மீதான நம்பிக்கையை இழந்து விட்டு அதனை எதிர்க்கின்றார் என்றால் அவர் அதனை விட்டும் வெளியேறிய பின்னர் அதனை எதிர்க்கின்ற அளவிற்கு சுயமரியாதை பெற்றிருக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “ஒரு ஜமாஅத்தின் அமைப்பைக் குறித்தோ அல்லது கொள்கைகளைக் குறித்தோ எவருக்காவது திருப்தி இல்லை என்றால் அவர் அதிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ள வேண்டும். மாறாக, அதில் இருந்து கொண்டே குழப்பம் செய்ய முயற்சிக்கக் கூடாது.” (த.ஃப்ஸீரே கபீர் தொகுதி 1, பக்கம்-177)



ஓர் அமைப்புடன் எவருக்காவது திருப்தி இல்லையென்றால், அவர் அதிலிருந்து கொண்டே குழப்பம் செய்வதை விட்டு விட்டு அதிலிருந்து விலகி விட வேண்டும் என்பதை நம்பிக்கையாளர்களும் நிராகரிப்பாளர்-களும் ஏற்றுக் கொள்வர். ஜமாஅத்தில் இருந்து கொண்டு, கலீ.ஃ.பாவின் பைஅத்தில் இருந்து கொண்டு பின்னர் அவரை மறைமுகமாக எதிர்ப்பது சுயமரியாதை கொண்ட எவருக்கும் இழிவானதாகவே தெரியும்.

முனா.ஃ.பிக்குகளின் தார்மீக பொறுப்பு ஜமாத்தை விட்டு வெளியேறிச் செல்வதே அல்லாமல் நம்பிக்கை கொண்டிருப்பதுபோல் பாவனை செய்து, ஒரு மார்க்க அமைப்பின் அங்கமாக இருந்து கொண்டு பின்னர் அதற்கு துரோகமாக நடந்து கொள்வது அல்ல. எனவேதான் உலகத்தின் கண்களுக்கு முன்பாகவும் அல்லாஹ்வுக்கு முன்பாகவும் முனா.ஃ.பிக்குகள் மிகவும் இழிவானவர்களாகக் கருதப்படுகின்றனர். முனா.ஃ.பிக் என்ற வார்த்தையே இந்த இழிவை உள்ளடக்கியுள்ளது. அரபி அகராதிகளின் படி முனா.ஃ.பிக் என்ற சொல்லின் வேர் இவ்வாறாகும்:

نَافَقَ الْيَرْبُوعُ என்பதன் பொருள் ‘யர்பூ’ என்ற எலி தனது பொந்தில் நுழைந்து கொண்டது என்பதாகும். النَّافِقَاءُ என்பதன் பொருள், மண்ணில் உள்ள ஒரு பொந்து, அதற்கு இரண்டு திறந்த முனைகள் உள்ளன. அதில் நுழைந்த பின்னர் எலி ஒரு முனையை அடைத்து விட்டு மற்றொரு முனையைத் திறந்ததாகவே விட்டு விடுகிறது. ஆபத்தான சமயத்தில் அது தப்பிச் செல்வதற்காக அடைக்கப்பட்ட முனையைப் பயன்படுத்திக் கொள்கிறது. النفق என்பதன் பொருள் ஒரு துளை அல்லது பூமியில் செல்லும் ஒரு பாதை. அதன் மறு முனையில் உள்ள திறப்பின் வழியாக வேறோர் இடத்திற்கு அது இட்டுச் செல்கிறது.

النفق என்பதன் பொருள் ஒரு வாசல் வழியாக மார்க்கத்தில் நுழைந்து மறுவாசல் வழியாக வெளியேறுவது, நயவஞ்சகத்தனமாக நடந்து கொள்வது. المنافق என்பதன் பொருள் நிராகரிப்பை உள்ளத்தில் மறைத்துக் கொண்டு நம்பிக்கையை நாவில் வெளிப்படுத்துவது, ஒரு நயவஞ்சகன். (அக்ரப், தாஜ் மற்றும் மு.ஃ.ப்ரதாத் (English Five Volume Commentary of p.5:67).

ஒரு முனா.ஃ.பிக் எலியைப் போன்றவராவார். நிராகரிப்பாளர்கள் அவ்வாறு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நிராகரிப்பாளர்களில் குறைந்தபட்சம் சிலர் சிங்கத்தைப் போன்று இருந்தனர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் அவர்களின் பண்புகள் சரியான திசையில் செலுத்தப்பட்டு பின்னர் அல்லாஹ்வின் சிங்கங்களாக அவர்கள் மாறினர். அவர்களில் பலர் நிராகரிப்-பாளர்களாக இருந்து நம்பிக்கைக் கொண்ட பின்னர் தமது வீரம் மற்றும் உறுதிப்பாட்டின் காரணமாக இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் புகழ் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கள் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டவர்களாக இருப்பதை நீங்கள் காண்கின்றீர்கள். இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் மிகச் சிறந்தவர்களாக இருந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் மார்க்க அறிவைப் பெற்றுக் கொண்டால் அவர்கள் இஸ்லாத்திலும் மிகச் சிறந்தவர்களாக இருப்பர். மக்களிலே மிகவும் மோசமானவர் இரட்டை முகம் கொண்டவர் ஆவார். அவர் அவர்களிடம் ஒரு முகத்துடன் வருகிறார். மற்றவர்களிடம் மற்றொரு முகத்துடன் செல்கிறார். (புகாரி, ஹதீஸ் எண் 3493)

ஒரு நிராகரிப்பாளரின் சில பண்புகளை நாம் பாராட்ட முடியும். ஆனால் ஒரு முனா.ஃ.பிக்கின் முதுகெலும்பற்ற நிலை அவருக்கு இழிவையே ஏற்படுத்துகிறது. நம்பிக்கையாளர்கள் மத்தியில் இருந்தாலும் நிராகரிப்பாளர்கள் மத்தியில் இருந்தாலும்

ஒரு முனா.ஃபிக் ஓர் எலியைப் போன்று இருக்கிறார். அவர்களின் இந்த இரட்டைத்தனமே அவர்களுக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் இழிவை ஏற்படுத்துகிறது. எனவேதான் அவர்கள் மிக மோசமானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

إِنَّ الْمُنٰفِقِيْنَ فِي الدَّرْكِ الْأَسْفَلِ مِنَ النَّارِ

நிச்சயமாக முனா.ஃபிக்குகள் நெருப்பின் மிக ஆழத்தில் இருப்பர். (திருக்குர்ஆன் 4:146)



ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "நினைவில் கொள்ளுங்கள்! நிச்சயமாக ஒரு முனா.ஃபிக் நிராகரிப்பாளர்களை விட மோசமானவர் ஆவார். ஒரு நிராகரிப்பாளர் குறைந்தபட்சம் துணிவும் உறுதிப்பாடும் கொண்டிருக்கிறார். அவர் துணிவுடன் தனது எதிர்ப்பைக் காட்டுகிறார். ஒரு முனா.ஃபிக்கிடம் துணிவோ உறுதிப்பாடோ இருப்பதில்லை. அவர் தனது எதிர்ப்பை மறைத்துக் கொள்கின்றார்." (மல்.ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 293)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் விளக்குகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவரையும் கட்டாயப்படுத்தவில்லை. இருப்பினும் அவர்களிடம் ஆட்சி இருந்தது. எனவே நயவஞ்சகர்கள் அன்னாரின் வாளுக்குப் பயந்தனர் என்று எவரும் தவறாக எண்ணக்கூடும். எப்படி இருப்பினும், 'எவரும் எவருக்கும் தீங்கிழைக்க முடியாத இந்த அமைதியான காலத்தில் ஒருவரது இயல்பு நயவஞ்சகத்தின் பக்கம் குனிகிறது என்றால் அவரே மிக மோசமான நபர் ஆவார். எனவே ஒருவர் இந்தக் காலத்தில் நயவஞ்சகத்தை வெளிப்படுத்தினால் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் தனது நயவஞ்சகத்தில் ஆயிரம் மடங்கு மோசமானவர் ஆவார்.' (குத்பாத்தே மஹ்மூத் 25, செப்டம்பர், 1914, பக்கம் 183)

சில முனா.ஃபிக்குகள் தமது குடும்பத்தின் சமூக அழுத்தத்திற்குப் பயந்து ஜமாஅத்தில் இருப்பதாக கூறுகின்றனர். அப்படியானால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் வயது வந்த பெரியவர்கள் எடுக்கும் முடிவுகளை எடுக்கும் போது தைரியத்தை எவ்வாறு வரவழைக்கின்றனர்? எனவே இந்த சாக்குப் போக்குகள் சிறுபிள்ளைத்தனமானதாகும். அவ்வாறே அவற்றை அழைக்கவும் வேண்டும். யாரைத் திருமணம் செய்வது என்பதை எவ்வாறு அவர்கள் முடிவு செய்கிறார்கள்? அவர்கள் எவரையாவது திருமணம் செய்ய விரும்பினால், அவர்களின் பெற்றோரோ அல்லது பாட்டியோ அவர்கள் மீது சமூக அழுத்தம் கொடுத்தால் அவர்கள் கண்மூடித் -தனமாக பின்பற்றும் அளவுக்குப் பெற்றோருக்குக் கீழ்ப்படிகின்றார்களா? இந்த சாக்குகள் எந்த பெரியவர் -களிடமிருந்தும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. வயது வந்தவர்கள் என்ற முறையில் தங்கள் வாழ்க்கை பற்றிய முடிவுகளை அவர்கள் எவ்வாறு எடுக்கிறார்கள்?

### முனா.ஃபிக்குகளின் பண்புகள்

இத்தகைய முனா.ஃபிக்குகளின் ஒரு பண்பு என்ன வென்றால் கலீ.ஃபா மீதோ அல்லது ஜமாஅத்தின் மீதோ அவர்களுக்கு ஏதாவது முறையீடு இருந்தால் அதனைக் குறித்து அவர்கள் கலீ.ஃபாவிடம் புகார் தெரிவிக்க மாட்டார்கள். மாறாக, அவர் குறித்த தப்பெண்ணத்தை ஜமாஅத் மக்களிடையே அவர்கள் பரப்புகின்றனர்.

அவர்களுக்கு கலீ.ஃபாவைப் பற்றியோ அல்லது ஜமாஅத்தைக் குறித்தோ ஏதேனும் முறையீடு இருந்தால் அதனை அவர்கள் கலீ.ஃபாவிடம் அல்லது ஜமாஅத்தில் சீர்திருத்தத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பாளர்களிடம் கொண்டு செல்ல வேண்டும். ஒருவர் தனது மனதில் கலீ.ஃபாவுடன் கருத்து வேறுபாட்டை வளர்த்துக் கொள்ள வாய்ப்புள்ளது. இருப்பினும் தனது சந்தேகத்தை கலீ.ஃபா முன் வைப்பது அவரது கடமையாகும். இதனால் அவர் அந்த சந்தேகத்தைக் களைய முடியம். (மின்ஹாஜுத் தாலிபீன், அன்வாருல் உலூம், தொகுதி 9 பக்கம் 162-164) கருத்து வேறுபாடு அனுமதிக்கப்பட்டது. ஆனால் கட்டுப்படாமையும் எதிர்ப்பும் அனுமதிக்கப்பட்டதல்ல. ஒரு முனா.ஃபிக் மக்கள் மத்தியில் கலீ.ஃபாவுக்குக் கட்டுப்படாமையைத் தனது செயல்கள் மற்றும் சொற்களால் பரப்புகின்றார். கலீ.ஃபாவிடம் அவர்கள் பைஅத் செய்திருக்கும் நிலையில் அவர்களின் செயல்கள் கலீ.ஃபாவையும் ஜமாஅத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தினால் அவர்கள் செய்வது முனா.ஃபிகத் (நயவஞ்சகம்)ஆகும்.

கலீ.ஃபாவிடமே இவர்கள் பைஅத் செய்துள்ளனர். அவர்கள் நேர்மையானவர்களாக இருந்தால் கலீ.ஃபாவுடன் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பதற்கு அவர்களிடம் எந்தக் காரணமும் இல்லை. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று அவர்கள் நம்பும் கலீ.ஃபாவை அவர்கள் நம்பவில்லை என்றால் அவர்கள் யாரை நம்புகின்றனர்? அவர் நியாயம் செய்வார் என்று அவர்கள் நினைக்கவில்லை என்றால், அவர்களின் பைஅத்தின் பொருள் என்ன?

சஹீஹ் புகாரியில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது:

ஹுனைன் (போரின்) நாளின் போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் போரில் கிடைத்த பொருட்களை

விநியோகம் செய்வதில் சிலருக்கு சாதகமாக இருந்தார்கள். …...ஒருவர் வந்து 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த பங்கீட்டில் நீதி செலுத்தப் -படவில்லை. அல்லாஹ்வின் திருப்தியும் நோக்கமாக இருக்கவில்லை' என்று கூறினார். நான் (அவரிடம்) கூறினேன். 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் (நீர் கூறியதை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைப்பேன்'.

அறிவிப்பின் இந்தப் பகுதி, எவராவது நயவஞ்சகத்தனமாக எதையாவது கூறினால் அதனை சஹாபிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்து விடுவார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. மேலும் கலீஃபாவிடம் தெரிவிப்பது நமது கடமை என்பதையும் இது தெரிவிக்கிறது. அந்த அறிவிப்பு தொடர்கிறது:



'நான் சென்று நபி (ஸல்) அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர்கள் 'அல்லாஹ்வும் அவனது தூதரும் நீதியுடன் நடக்கவில்லை என்றால் வேறு எவர் நீதியுடன் நடப்பார்? அல்லாஹ் மூஸாவின் மீது கருணை செய்வானாக! அவர் இதை விட அதிகமாக துன்புறுத்தப்பட்டார். இருப்பினும் அவர் பொறுமை செய்தார்'. (ஸஹீஹ் புகாரி, ஹதீஸ் எண் 3150)

கலீஃபா நீதியுடன் நடக்கவில்லை என்று முனாஃபிக்குகள் நம்பினால் அவர்கள் எவ்வாறு கலீஃபா இறைவனாலே நியமிக்கப்படுகிறார் என்று நம்புகின்றனர்? எவ்வாறு அவரிடம் பைஅத் செய்கின்றனர்? ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்றே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் இது போன்று முதுகுக்குப் பின்னால் தாக்கும் முனாஃபிக்குகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'முனாஃபிக்குகள் எந்த அளவு முட்டாள்கள் என்றால், அவர்கள் ஒருபுறம் தமது சபைகளில் ஜமாஅத்திலும் நிஸாமிலும் தீமைகள் என்று அவர்கள் கருதுவதைப் பற்றி பேசுகிறார்கள். ஆனால் ஒரு நம்பிக்கையாளர் அவர்களைச் சந்தித்து கலீஃபத்துல் மஸீஹிடம் இதைத் தெரிவிக்கச் சொன்னால் தேவையில்லாமல் விஷயங்களைப் பெரிதாக்க விரும்பவில்லை என்று கூறுகிறார்கள்.

ஒருபுறம் அவர்கள் கிளர்ச்சியையும், பிணக்கையும் பரப்புகின்றனர். மறுபுறம் அவர்கள் பிணக்கை வெறுப்பதாக கூறுகின்றனர். ஆனால் அவர்கள் விமர்சிக்கும் விதமே கிளர்ச்சியே அன்றி வேறில்லை. ஆனால் கலீஃபத்துல் மஸீஹிடம் நீங்கள் ஏன் தெரிவிக்கவில்லை என்று கேட்டால், தம்மை பெரிய சீர்திருத்தவாதிகள் போல் பாவனை செய்து 'நாங்கள் எந்தப் பிணக்கையும் தொடங்க விரும்பவில்லை. நாங்கள் புகார் செய்தால் அவர் என்ன சொல்வார்?' என்று கேட்கின்றனர். (குத்பாத்தே மஹ்மூது 5, ஆகஸ்ட் 1938 பக்கம் 491)

இந்த முனாஃபிக்கள் அமைதியை விரும்புவதாகச் சொல்வதில் நேர்மையானவர்களாக இருந்தால் அவர்கள் தமது ஆட்சேபனைகளை கலீஃபாவிடம் பகிர்ந்து கொள்வார்கள். ஆனால் அவர்கள் அவரது முதுகுக்குப் பின்னால் சென்று வேற்றுமைகளைப் பரப்பினர். இது முனாஃபிகத் ஆகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறினார்கள்:

சீர்திருத்தம் மட்டுமே அவர்களின் நோக்கமாக இருந்தால் தமது தனிப்பட்ட சபைகளில் ஆட்சேபனைகளைக் கூறுவதை விட்டு விட்டு நிஸாமே ஜமாஅத்தில் உள்ள பொறுப்பாளர்களின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வர வேண்டும். (குத்பாத்தே மஹ்மூது 5, ஆகஸ்ட் 1938 பக்கம் 505)

ஒரு நபரின் முனாஃபிகத்தின் மிகப் பெரிய அடையாளம் எதுவென்றால், எவருக்கு எதிராக அவர்கள் புகார் கூறுகின்றார்களோ அவரிடம் புகார் கூற மாட்டார்கள். அதைத் தவிர்த்து விட்டு மக்கள் மத்தியில் அவரைக் குறித்து தப்பெண்ணத்தைப் பரப்பி விடுவார்கள். இந்த அடையாளத்தைப் பார்த்த பின்பும் ஒருவரால் ஒரு முனாஃபிக்கை அடையாளம் காண முடியவில்லை என்றால் அவர்களை விடப் பெரிய முட்டாள் எவருமில்லை. முனாஃபிக்கத்தை அடையாளம் காண்பது வேறு எதனையும் அடையாளம் காண்பதை விடவும் எளிதானது ஆகும். (குத்பாத்தே மஹ்மூது 3, ஜூன் 1949 பக்கம் 140)

இந்த பண்பினை நாம் மனதில் வைத்துக் கொண்டால், முனாஃபிக்கத்தை அடையாளம் காண்பதில் எந்தப் பிரச்சனையும் இருக்காது.

### 2. நம்பிக்கையையும் நயவஞ்சகத்தையும் கலந்து விடுபவர்கள்:

நயவஞ்சகர்களின் மற்றொரு பிரிவினர் நம்பிக்கை -யையும் நயவஞ்சகத்தையும் கலந்து விடுபவர்களாவர். அவர்கள் இஸ்லாத்தின் மீதும், அஹ்மதிய்யத்தின் மீதும், கலீஃபாவின் மீதும் நம்பிக்கை கொள்பவர்கள். ஆனால் அவர்களின் தொடர்பு அவர்களின் மனங்களுடன் மட்டுமே

உள்ளது. அவர்களின் இதயங்களுடன் அல்ல. அவர்களின் உள்ளங்களில் ஜமாஅத்தின் மீது பற்று இல்லாததால் அவர்கள் அல்லாஹ்வின் ஜமாஅத்தை விமர்சித்து கண்டிக்கிறார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அவர்களின் இந்த நிலையை திருக்குர்ஆனின் வசனத்தைக் கொண்டு இவ்வாறு விளக்குகிறார்கள்.

كُلَّمَآ اَضَآءَ لَهُمۡ مَّشَوۡا فِيۡهِ ۙ وَاِذَاۤ اَظۡلَمَ عَلَيۡهِمۡ قَامُوۡا

அது அவர்கள் மீது பிரகாசிக்கும் போதெல்லாம் அவர்கள் அதில் நடக்கிறார்கள். அவர்களுக்கு இருட்டாகும் போது அவர்கள் அசைவற்று நின்று விடுகின்றனர். (திருக்குர்ஆன் 2:21)

அல்லாஹ் அவர்களைக் குறித்துக் கூறுகின்றான்:

فِىۡ قُلُوۡبِهِمۡ مَّرَضٌ ۙ அவர்களின் உள்ளங்களில் ஒரு நோய் இருந்தது. (திருக்குர்ஆன் 2:11)

இதன் பொருளாவது, அவர்கள் உள்ளங்களில் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் அத்துடன் ஒரு நோயும் இருக்கிறது. (குத்பாத்தே மஹ்மூது 5, ஆகஸ்ட் 1938 பக்கம் 499)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வகை முனா∴பிக்குகளைக் குறித்துக் கூறுகிறார்கள்:

எந்த உள்ளம் ஈமானையும் ந∴பக்கையும் (நயவஞ்சகத்தையும்) தன்னுள் கொண்டுள்ளதோ அதன் நிலையாவது: அதனுள் உள்ள ஈமான் தூய நீரால் வளர்க்கப்படும் சிறு செடி போன்றது. அதனுள் உள்ள ந∴பக் சீழ் மற்றும் இரத்தத்தில் வளரும் புண் போன்றது. இரண்டில் எது அதன் வாழ்வாதாரத்தை அதிகமாகப் பெறுகின்றதோ அது மற்றதை மிஞ்சி விடுகிறது. (முஸ்னது அஹ்மதின் மேற்கோளுடன் த∴ப்ஸீரே கபீர் தொகுதி 1 பக்கம் 201)

இந்த வகை முனா∴பிக்களின் ஓர் அடையாளம் என்னவென்றால், அவர்கள் கிலா∴பத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் அதே வேளையில் ஜமாஅத்தின் மீது நம்பிக்கையை இழந்திருப்பார்கள். சில பொறுப்பாளர்களிடம் பலவீனங்கள் உள்ளன. இது எந்த சமூகத்திலும் தவிர்க்க முடியாததுதான். இருப்பினும், ஜமாஅத் கெட்டுப் போய் விட்டது என்று பரவலாகப் பேசுவதே ஒருவரை முனா∴பிக் ஆக்குகிறது.

அல்லாஹ்வின் ஜமாஅத்தின் மீது நம்பிக்கை இழப்பது இறுதியில் கிலா∴பத்தையும் பின்னர் வாக்களிக்கப்பட்ட மஸீஹையும் நிராகரிப்பதற்கு இட்டுச் சென்று விடும் என்பதை அவர்கள் உணரவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

“வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விளக்கியபடி ஒரு முனா∴பிக்கின் ஒரு பெரிய அடையாளம் என்னவென்றால், அவர்கள் ஜமாஅத்தை விமர்சிப்பார்கள். ஜமாஅத் சீரழிந்து கெட்டு விட்டது என்று வெளிப்படையாகக் கூறுவார்கள். ஜமாஅத் அழிந்து விட்டது என்று எவர் கூறுவாரோ அவர் ஒரு முனா∴பிக் என்று அவருக்குத் தெரியும். ஜமாஅத் சீர்கெட்டு விட்டது என்று அவர்கள் கூறும்போது அது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத் தாக்குவதாகவே பொருள்படும்.

முன்னறிவிக்கப்பட்ட முன்னேற்றத்தின் காலம் இன்னும் வரவில்லை. எனவே ஜமாஅத் கெட்டு விட்டதென்றால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வாறு உண்மையாகவே இறைவனால் நியமிக்கப்பட்டவராக இருக்க முடியும்? ஜமாஅத் கெட்டு விட்டது என்று எவர் கூறுவாரோ அவரே பொய்யர் ஆவார். உண்மையில் அவரது ஈமானே கெட்டு விட்டது. எவர் உடல் நலம் குன்றி இருப்பாரோ அவரது நாவிற்கு எல்லாமே கசப்பாகவே இருக்கும்.” (அன்வாருல் உலூம் தொகுதி 10 பக்கம் 93-94)

முனா∴பிக்குகளின் இந்த குணாதிசயத்தைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மக்கள் அழிந்து விட்டார்கள் என்று ஒருவர் கூறினால் அவர்களில் மிகவும் அழிந்தவர் அவரே ஆவார். (முஸ்லிம்)

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தில் உள்ள சில அறிவீனர்கள் முனாஃபிக்குகளின் ஒழுங்கீனத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இந்த ஜமாஅத்தை இறைவன் பாதுகாப்பான் என்று கூறுகிறார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் புதல்வர்களில் ஒரு மோசமான நபர் செய்த செயலை அவர்கள் பார்க்கவில்லையா? அன்றைய முஸ்லிம்களும் இஸ்லாத்தின் பாதுகாவலன் இறைவன் என்றே நினைத்தார்கள். மேலும் குழப்பங்களை எதிர்ப்பதில் அலட்சியம் காட்டினார்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகளை நினைத்து ஒவ்வொரு முஸ்லிமும் இன்று வரை கண்ணீர் வடிக்கிறார். (குத்பாத்தே மஹ்மூது 27 ஜுலை 1956 பக்கம் 319-320)

# உண்மையின் காரணமாக கிடைத்த விடுதலை

அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக நமக்குக் கிடைத்துள்ள பொக்கிஷங்கள் நல்லொழுக்கம், தக்வா, தூய்மை ஆகியனவாகும். அவற்றைப் பெறுவதற்கு எவ்வித தியாகமும் செய்யத் தயங்கக் கூடாது. மேலும் அவற்றை நமது சந்ததிகளுக்கும் வாரிசாக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் சய்யித் ஹாமித் ஷா சாஹிப் (ரலி) அவர்களைத் தமது 12 சீடர்களில் ஒருவராகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஒருமுறை இவர்களது பையனின் கையினால் ஒரு கொலை நடைபெற்றது. இந்தக் கொலை நடைபெற்ற சமயத்தில் மக்களின் அனுதாபமும் இந்தப் பையனுடனே இருந்தது. கொலை செய்யப்பட்டவர் வரம்பு மீறினார். அதனால் சண்டை ஏற்பட்டது. அப்போது அவரது பையன் ஒரு குத்து குத்தினார். எதிரி மரணமடைந்து விட்டார். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சம்பவம் போன்று நிகழ்ந்து விட்டது.




ஆங்கிலேயராக இருந்த ஸியால்கோட்டின் Deputy Commissioner குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் நிரூபிக்கப்படாவிட்டாலும் தண்டனை வழங்கக் கூடியவர். அதன் மூலம் தனது கண்ணியத்தை நிலைபெறச் செய்ய வேண்டும் என நினைப்பார். அவரது அலுவலகத்தில்தான் மீர் ஹாமித் ஷா சாஹிப் Superintendent ஆக பணிபுரிந்து வந்தார்கள். நான் இவரது மகனுக்கு தண்டனை வழங்கினால் எனது நீதியின் உணர்வு குறித்து புகழ்ந்து பேசப்படும் என அவர் கருதினார். எனவே ஷா சாஹிபை அழைத்து உண்மையிலேயே உங்களது மகன் கொலை செய்தானா என அவர் கேட்டார். அதற்கு ஷா சாஹிப், சமபவத்தின்போது நான் அங்கு இல்லை. ஆனால் அவன் தான் கொலை செய்தான் எனக் கேள்விப்பட்டேன் என்றார்கள்.

அதற்கு அவர் நீங்கள் உமது மகனை அழைத்து குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி கூறுங்கள். இதன் மூலம் மக்களுக்கு நாம் நீதியில் எந்தப் பாகுபாடும் காட்டவில்லை எனத் தெரிய வரும் என்றார். அன்னார் தமது மகனை அழைத்து நீ இந்த நபரைக் கொன்றாயா? எனக் கேட்டார்கள். அதற்கு ஆமாம் கொலை செய்தேன் என்றார். பிறகு உண்மையை ஒப்புக்கொள் என்றார்கள். மக்கள்,உமது வாலிப மகனை ஏன் தூக்கிலிட விரும்புகின்றீர்கள் எனக் கேட்டனர். அதற்கு அவர்கள் இவ்வுலகத் தண்டனையை விட மறு உலகத் தண்டனை கடினமானது எனக் கூறினார்கள். மேலும் தமது மகனிடம் குற்றத்தை ஒப்புக்கொள் என அறிவுரை வழங்கினார்கள்.

இந்தப் பையன் கிரிக்கெட் விளையாட்டு வீரர் ஆவார். எந்த மேஜிஸ்ட்ரேட்டிடம் இவரது வழக்கு சென்றதோ அவரும் கிரிக்கெட் விளையாடக் கூடியவர் ஆவார். அவருக்கு கிரிக்கெட் கிளப்பிலிருந்து உண்மையான விஷயம் தெரிய வந்தது.

மேஜிஸ்ட்ரேட்டிற்கு ஏதாவது விஷயத்தின் மீது உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விட்டால், பிறகு குற்றவாளியிடம் எதுவும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஆக, அவரே காவல்துறையிடம் சாட்சியளித்தார். அதனால் அந்தப் பையனுக்கு விடுதலை கிடைத்தது. எந்த விதமான கேள்வியும் இல்லாமலேயே அவர் விடுதலை செய்யப்பட்டார். உண்மையின் காரணமாக அவர் விடுதலை ஆனார்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 29.11.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

13

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

## லூதியானா, ஸனாவூர் ஆகிய நகரங்களுக்கு மேற்கொண்ட பயணம்

1883 ஆம் ஆண்டு நவம்பர் மாத ஆரம்பத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா நூல் அச்சிடும் வேலை தொடர்பாக அமிர்தசரஸ் சென்றார்கள். மீர் அப்பாஸ் அலீயும் பிற நண்பர்களும் லூதியானாவுக்கு வரும்படிக் கேட்டுக் கொண்டதால் அமிர்தசரஸிலிருந்து லூதியான செல்ல திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு அமிர்தசரஸில் இருக்கும் பொழுதே உடல் நலக் குறைவு ஏற்பட்டது. எனவே லூதியானாவுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் ஒத்திப் போடப்பட்டது. எனவே 1883 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் நாள் காதியானுக்கே திரும்பிச் சென்றார்கள். மீண்டும் மீண்டும் நண்பர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க 1883 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் லூதியானா நகருக்குச் செல்ல ஆயத்தமானார்கள். ஆனால் அந்நேரம் அவர்களது நூலை அச்சிடுவதில் ஏற்பட்ட தாமத்தைப் பற்றி அமிர்தசரஸிலுள்ள ரியாதே ஹிந்த் அச்சகத்திலிருந்து தகவல் வந்தது. அமிர்தசரஸிலிருந்து சஷ்யமே நூர் அச்சகம் அந்நூலின் ஒரு பகுதியை அச்சிடுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் சிதைந்து போயிருந்தன. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாமே அமிர்தசரஸுக்குச் சென்று அவ்வேலைகளை நேரடியாக மேற்பார்வையிட வேண்டியதாயிற்று. கிறிஸ்துமஸ் விடுமுறைக் காலத்தில் சில நண்பர்கள் காதியானுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப் -பட்டதால், அக்காலத்தில் காதியானிலேயே தங்கி இருக்க வேண்டியதாயிற்று. எனவே 1884 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் அமிர்தசரஸுக்குப் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் பயணம் மேற்கொண்ட சரியான தேதிகள் தெரியாவிட்டாலும் அவர்கள் பலமுறை அமிர்தசரஸுக்குச் சென்றார்கள் என்பது மட்டும் தெரிய வந்தது.

லூதியானா நகரைச் சேர்ந்த நண்பர்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவர்கள் 1884 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அந்நகருக்குச் சென்றிருக்கலாம் எனத் தெரிய வருகிறது. இந்தப் பயணத்தின்போது ஜான் முஹம்மது, ஹாஃபிஸ் ஹமீது அலி (ரலி), மாவ்லா மால் ஆகியோர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடன் சென்றதாக மீர் அப்பாஸ் அலீ அவர்களின் மருமகனான மீர் இனாயத் அலீ கூறுகிறார். லூதியானாவில் வாழ்ந்த மக்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை அதற்கு முன் நேரில் பார்த்துப் பழகி இருக்காவிட்டால் கூட அன்னாரை வரவேற்க ஜஜ்ஜாரைச் சேர்ந்த நவாப் முஹம்மது அலீ உள்பட பெருந்திரளான கூட்டம் இரயில் நிலையத்திற்கு வந்திருந்தது. லூதியானாவில் ஸூஃபியான் என்ற இடத்தில் அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நடைப்பயிற்சி செய்யும்போது அவர்கள் போகுமிடமெல்லாம் ஒரு கூட்டம் அவர்களோடு சென்று கொண்டே இருந்தது. அவர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களே லூதியானாவில் தங்கியிருந்த போதிலும், அங்குள்ள மக்கள் மனதில் ஓர் ஆழமான தெய்வீகத் தாக்கத்தை ஏற்படுத்திச் சென்றார்கள். ஏதோ ஒரு சக்தி மக்களை அவர்களின் பக்கம் ஈர்த்தது. அவர்களைக் காண வந்த ஒவ்வொருவரும் தாம் ஓர் இறை மனிதரோடு உடன் இருப்பதாக உணர்ந்தனர். உண்மையைத் தேடுவோரும், இஸ்லாத்தை நேசித்தவர்களும் அவர்களைக் கண்டபொழுது ஆறுதல் பெற்றனர். அவர்களின் வாயிலிருந்து வெளிவந்த ஞானமிக்க சொற்களைக் கேட்ட இறையச்சம் கொண்டோர் மகிழ்ச்சியாலும், ஆனந்தத்தாலும் பரவசத்தில் ஆழ்ந்தனர். ஆனால் ஆன்மாக்கள் வருத்தமும் கலக்கமும் அடைந்தன. அவர்களின் முகத்திலிருந்து வெளிவந்த தெய்வீக ஒளி தீய எண்ணம் கொண்ட வேதபாரகர்களையும், குருடர்களான பரிசேயர்களையும் தனது வயிற்றுப் பிழைப்பைப் பற்றி கவலை கொள்ளச் செய்தது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் லூதியானா பயணத்தைப் பற்றித் தமது பத்திரிகையில் பராஹீனே அஹ்மதிய்யாவுக்கு ஆய்வுரை எழுதும் பொழுது பட்டாலாவைச் சேர்ந்த மவ்லானா முஹம்மது ஹுஸைன் பின்வருமாறு

குறிப்பிடுகின்றார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எல்லா விதமான பிரிவின் வாதத்தையும் கிளர்ச்சியையும் கண்டித்ததால் அரசாங்கத்திற்கு விசுவாசமாக இல்லாதிருந்த மவ்லவிகளாக அப்துல் காதிரின் மகன்களான அப்துல் அஸீஸ், முஹம்மது ஆகியோருக்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் பிடிக்கவில்லை. (பார்க்க இஷா அத்துஸ் ஸுன்னா பாகம் 6 எண்: 10)

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் கருத்துப்படி, லூதியானவிலிருந்த மவ்லவிகள் கலக்கமடைந்ததற்கு இன்னொரு காரணம், பராஹீனே அஹ்மதிய்யா என்னும் நூலின் ஆசிரியர் (அதாவது மிர்ஸா குலாம் அஹ்மது அலைஹிஸ்ஸலாம்) அந்நகர மக்களின் வேண்டுகோளை ஏற்று அந்நகருக்கு வருகை தந்த பொழுது அம்மவ்லவிமார்கள் நிதி திரட்டிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் ஒளிமிக்க தோற்றமும் அவர்களிடமிருந்து வெளிப்பட்ட ஆன்மீக ஒளியும் மக்களை அன்னார் பால் ஈர்த்தன. அவர்களுள் பெரும்பாலார் அன்னாரின் முக்கியத்துவமும், மதிப்பு மிக்க நூலின் வெளியீட்டிற்காக நன்கொடை வழங்க முன் வந்தனர். இதன் காரணமாக மவ்லவிமார்களுக்கு வர வேண்டிய வருமானம் பாதிக்கப்பட்டது. எனவே அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் குற்றம் குறை காணத் தலைப்பட்டனர். அன்னாருக்கு எதிராக மார்க்க நூல்களின் ஆதாரங்களைக் கூற ஆரம்பித்தனர்.

1884 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீர் அப்பாஸ் அலீ அவர்களை உடல் நலம் விசாரிப்பதற்காக மீண்டும் ஒருமுறை லூதியானா நகருக்கு வருகை தந்தார்கள். ஒன்றோ இரண்டோ நாட்கள் அங்கு தங்கினார்கள்.

1884 ஆம் ஆண்டு தமது வேண்டுகோளை ஏற்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஸனாவூருக்கு வந்து தமது இல்லத்திற்கு வருகை தந்து பரக்கத்திற்காக துஆ செய்ததாக எனது மாமா M. அப்துல்லாஹ் சனவ்ரி அவர்கள் கூறுகிறார்கள். எனது மாமாவின் தாத்தாவான முஹம்மது பக்ஷ் அவர்கள் அந்நேரம் உயிரோடு இருந்தார். எனவே அன்னாரோடு கைகுலுக்கிக் கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெற்றார். தம்முடைய ஊழியர்களோடு உள்ள உறவையும் நட்பையும் புனிதப்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகளால் உயர்ந்து நிற்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இனிய பண்பை என்னவென்று சொல்வது?

## திருமணம்

மீர் நாஸிர் நவாப் (1846–1924) அவர்களைப் பற்றி ஏற்கனவே கூறியிருக்கிறோம். அவர் டெல்லியைச் சேர்ந்த ஒரு புகழ்பெற்ற சய்யித் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய மூத்த சகோதரர் லுஹருவைச் சேர்ந்த நவாப் அலாவுத்தீன் கானின் தந்தையான நவாப் அமீனுத்தீன் கானின் மகளைத் திருமணம் முடித்திருந்தார்.

மீர் நவாப் சாஹிப் காதியானுக்கு வந்த பொழுது தனது மகளுக்கு வரன் பார்ப்பதில் மும்முரமாக இருந்தார். நவாப் சாஹிப் விரும்பினால், அவர் மகளை தாமே மணமுடித்துக் கொள்வதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விருப்பம் தெரிவித்தார்கள். நவாப் சாஹிபின் மனைவிக்கு, அவர்களுக்கு இடையே இருந்த வயது வித்தியாசம் ஒரு தடையாகத் தென்பட்டது. அவர் இதற்கு முன்னர் தம் மகளுக்காக வந்த பல வரன்களை நிராகரித்திருக்கிறார். மீர் சாஹிப் இன்னொரு வரனின் பெயரைக் கூறினார். அவர்களுக்கு அதுவும் பிடிக்கவில்லை. இவரை விட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஆயிரம் மடங்கு சிறந்தவர் என்று குறிப்பிட்டார். மீர் சாஹிப் ஏற்கனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குத் தம் மகளை மணமுடித்துக் கொடுப்பதில் இசைவு கொண்டிருந்தார். எனவே அவர் தம் மனைவியிடம் அப்படியானால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்க உமக்கு சம்மதமா என வினவினார். தம் மகளுக்கு ஏற்கனவே 18 வயது ஆகிவிட்டதால் அதிக காலதாமதப்படுத்தாமல் பதில் கூற வேண்டும் என



வற்புறுத்தினார். எனவே அவரது மனைவி சம்மதம் தெரிவித்தார். உடனே அந்தச் செய்தியை மீர் சாஹிப் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். ஒரு வாரம் கழித்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சவுத்ரி ஹமீது அலீ, மலாவாமால் போன்ற சில ஹிந்து முஸ்லிம் நண்பர்களோடு டெல்லி வந்து சேர்ந்தார்கள்.

மீர் சாஹிபின் உறவினர்கள் இந்தத் திருமணப் பொருத்தத்தை விரும்பவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு வயது அதிகம் ஆகியிருந்தது. மேலும் மொழி மற்றும் பழக்கவழக்கங்களில் காணப்படும் வித்தியாசங்களின் காரணமாக டெல்லிப் பகுதி மக்களுக்குப் பஞ்சாபிகளைப் பிடிக்காது. ஆனால் மீர் சாஹிப் உறுதியான உள்ளம் கொண்டவராக இருந்தார். எனவே அவர் இந்த ஆட்சேபணைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. எனவே மணப்பெண்ணின் சம்மதம் பெற்றபின் திருமணம் நடந்தேறியது. மஹராக ₹ 1100/– நிர்ணயிக்கப்பட்டது. இது மீர்

நவாப் சாஹிபால் கூறப்பட்ட தொகையாகும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் துணைவியார் பெயர் நுஸ்ரத் ஜஹான் பேகம் (ரலி) ஆகும்.

(இந்நூல் எழுதப்படும் பொழுது இறைவன் அருளால் அவர்கள் உயிரோடு இருந்தார்கள்.)

இந்தத் திருமணம் ஹிஜ்ரி 1302 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் 27 ஆம் நாள் (1884 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்) நடைபெற்றது. இந்தத் திருமணம் மவ்லவி நதீர் ஹுஸைன் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது. அவருக்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அன்பளிப்பாக ₹ 5/–ம் ஒரு தொழுகை விரிப்பும் வழங்கினார்கள். அந்நேரம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு கிட்டத்தட்ட 50 வயது ஆகியிருந்தது. இந்த வயது வித்தியாசம் அன்னாரின் ஆன்மீகத் தலைவரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுடன் திருமணம் நடந்தேறிய போது இருந்த வயது வித்தியாசத்தை நினைவுபடுத்துகிறது.

இந்தத் திருமணச் செலவுகளைச் சந்திப்பதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் போதிய பண வசதி இல்லாமல் இருந்தது. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் நண்பர்களிடமிருந்து இதற்காகக் கடன் வாங்க வேண்டியதிருந்தது. லாஹூரைச் சேர்ந்த கணக்காயர் (Accountant) ஆன முன்ஷி அப்துல் ஹக் (ரலி) ₹ 500/– கடனாக வழங்கினார்.


(ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க விரும்பினார்கள். ஆனால் முன்ஷி அப்துல் ஹக் ரலியல்லாஹு அன்ஹு அந்தப் பணத்தை ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எழுதி வெளியிட இருந்த சிராஜே முனீர் என்ற நூல் வெளியீட்டுக்குத் தம்முடைய நன்கொடையாக வைத்துக் கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டார்.)

காலாநவர் என்ற ஊரைச் சேர்ந்த ஹக்கீம் முஹம்மது ஷரீஃப் ரூபாய் இரு நூறோ முந்நூறோ வழங்கினார். நிர்ணயிக்கப்பட்ட மஹர் தொகையில் பாதி மணமகளிடம் ரொக்கமாக வழங்கப்பட்டது. நாட்டில் நிலவிய அக்கால வழக்கப்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விலையுயர்ந்த ஆடைகளையும், நகைகளையும் தம்மோடு எடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு எடுத்துச் செல்லவில்லை. டெல்லியில் ஏற்படும் பல்வேறு செலவுகளுக்காகவும் அவர்கள் தம்மோடு எடுத்துச் சென்ற பணம் ₹ 250/– மட்டும்தான். இதன் காரணமாக மீர் சாஹிபின் உறவினர்கள் திருமணத்தைப் பற்றி மேலும் பரிகாசம் செய்தனர். ஆனால் அவர் அவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உறவினர்களும் அவர்களோடு இணக்கமாக இல்லை. எனவே இந்தச் சந்தர்ப்பதில் காதியானில் எந்தப் பரபரப்பும் காணப்படவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மீது அக்கறை காட்டியவர் ஒரே ஒருவர்தாம். அவர் அவர்களின் முதல் மனைவியின் தாயாரான சிராக் பீவி ஆவார்கள். அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மனைவியான நுஸ்ரத் ஜஹான் (ரலி) அவர்களை நேசித்தார்கள். குடும்பத்தில் உள்ள மற்றவர்களோ, வெறுப்பின் காரணமாக அவர்களை 'டெல்லிக்காரி' என்று பரிகாசமாக அழைத்தனர்.

டெல்லியைச் சேர்ந்தவரான அந்த இளம் மணப்பெண் காதியானில் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டவராகவே உணர்ந்திருக்க வேண்டும். தம் தாய் தந்தையரைப் பிரிந்து நாட்டின் ஓரத்தில் ஒரு கிராமத்தில் வாழ்ந்தது அவர்களுக்கு வித்தியாசமான ஓர் அனுபவமாகவே இருந்திருக்கும். ஆங்கிலேயர்கள் கைப்பற்றுமுன், அந்தப் பழமையான மிகப்பெரிய அந்நகரம் (அதாவது டெல்லி) ஏழு முறை ஆட்சி பீடத்தின் தலைமையகமாக இருந்திருக்கிறது. யமுனை நதி, பழைய கோட்டை, மசூதிகள், பேரரசர் ஹுமாயூன் நினைவிடம், ஃபெரோஸ் ஷாவின் கல்லறை, குதுப் மினார், நிஸாமுத்தீன் வலியுல்லாஹ் ஆகியவற்றை உள்ளடக்கி 45 மைல் சுற்றளவில் பரந்து கிடந்த அந்நகரம் எல்லாத் திசைகளிலிருந்தும் பார்வையாளர்களையும் ஈர்த்தவண்ணமிருந்தது. அங்கிருந்த



பூர்வாங்கக் கைவினைஞர்கள், நகை, தந்த வேலைப்பாடு, வெள்ளி, பித்தளை, தாமிர வேலைப்பாடு, மண்பாண்டங்கள் செய்தல், நெசவு, பூவேலைப்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். காதியானில் இது போன்ற சிறப்புக்கள் எதுவுமில்லை. ஒரு காலத்தில் பலம் பொருந்திய மன்னர்களும், மஹாராணிகளும் நடமாடிய டெல்லி நகர வீதிகளைக் காண முடியாத பாதிப்பு அவர்களுக்கு இருந்துதான் இருக்கும். அவர்கள் இப்போது உலகில் அதிகம் அறியப்படாத ஓரிடத்திற்கு வந்திருந்தார்கள். மொழியிலும் வித்தியாசம் இருந்தது. அவர்களுடைய வாழ்க்கை முறை பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்துமே மாறுபட்டதாகவும், புதுமையானதாகவும் இருந்தது. அவர்களின் புதிய உறவினர்களின் நேசமில்லாத, வெறுப்பான அணுகுமுறையும் மாறுபாடான உணர்வை அதிகப்படுத்தியது. அன்னாரின் புகுந்த வீடு டெல்லியை விடப் பல மடங்கு அன்பிற்குரியதாக எப்போது மாறும் என்று அவர்களால் உறுதியாக கூற முடியாத சூழ்நிலை நிலவியது.இப்போது (இந்த வரலாறு எழுதப்படும் இக்காலத்தில்) அவர்கள் 60 ஆண்டுகளுக்கும் மேலாக காதியானில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை வெறுப்போடு பார்த்த நபர்களை இன்று அங்கு காண முடியவில்லை. அவர்கள் ஒரு புதுமணப் பெண்ணாக அந்நகருக்குள் நுழைந்த போது நிலவிய அன்னியமானதும் பரபரப்பானதுமான சூழ்நிலை முற்றிலுமாக மறைந்து விட்டது. இப்போது அவர்கள் நம்பிக்கையாளர்களின் தாயாக விளங்குகிறார்கள். காதியானில் வாழ்கின்ற மக்கள் மட்டுமல்லாமல் ஒவ்வோர் ஆண்டும் அந்நகரில் வந்து சேரும் ஆயிரக்கணக்கான மக்களின் மனதிலும் ஓர் உன்னதமான இடத்தில் வைத்துப் போற்றப்படுகிறார்கள். ஒரு மகாராணியைப் போல் அவர்களின் அன்பைப் பெற்றுத் திகழ்கிறார்கள். மன்னர்களும், மகாராணிகளும் அன்னாரிடமும் அன்னாரின் குழந்தைகளிடமும் அருள் தேடும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்று கூறினால் அது மிகையாகாது.



ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் (ரலி)

ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த உலகத்தைச் சேர்ந்தவர்களில்லையே! உறவினர்களின் இந்தப் போக்கு அவர்களைச் சிறிதும் பாதிக்கவே இல்லை. அவர்கள் முற்றிலும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். இந்தத் திருமணத்தின் மூலம் அற்புதமான விதத்தில் இறைவனின் வாக்கு நிறைவேறியதைக் கண்டார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே இறைவன் அவர்களுக்கு பின்வரும் இறையறிவிப்பைச் செய்திருந்தான்:

'அஹ்மதே! நீரும் உமது மனைவியும் இந்த சொர்க்கத்தில் வாழ்வீர்களாக!'

'என்னுடைய அருளுக்கு நன்றியுடையவராக இருப்பீராக! நீர் என்னுடைய கதீஜாவைக் கண்டு கொண்டீர்.'

'உம்மோடு உம் மனைவியையும், வம்சத்தையும் கண்ணியப்படுத்திய இறைவனுக்கே எல்லாப் புகழும்.'

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது திருமணச் செலவுகளைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது அவர்களுக்குப் பின்வரும் இறையறிவிப்புக் கிடைத்தது:

"உமது திருமணத்திற்கான அனைத்துத் தேவைகளையும் நாம் நிறைவேற்றி வைப்போம். உமக்குத் தேவையான அனைத்தையும் நாம் வழங்குவோம்."

இந்த இறைவாக்குகள் நிறைவேறிய விதம் பற்றி நீண்ட நாட்களுக்குப் பின் எழுதும்பொழுது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"என் விஷயத்தில் இறைவன் நடந்து கொண்ட விதம் எந்தத் தகப்பனும் தன் மகனைப் பராமரிப்பதில்லை. இறைவன் என்னைக் கவனித்தது போல் இந்த உலகில் எந்தத் தாயும் தன் குழந்தையைக் கவனிப்பதற்குக் கண் விழிப்பதில்லை."

இறைவன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் திருமணத்திற்கான பணத் –தேவைகளையும், பிற தேவைகளையும் நிறைவேற்றி வைத்ததோடு மட்டுமல்லாமல் அன்னாரின் உடல் வலிமையையும் அதிகப்படுத்தினான். அவர்களின் உடல் வலிமையைப் பற்றி அன்னாரின் நண்பர்கள் அச்சம் கொண்டிருந்தனர். நீரிழிவு நோய் காரணமாக அவர்களுக்கு இருந்து வந்த நரம்புத் தளர்ச்சி பற்றியும், பிற நோய்கள் பற்றியும் ஹக்கீம் முஹம்மது ஷரீஃப் என்பவர், பட்டாலாவைச் சேர்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைனிடம் தமது அச்சத்தை வெளிப்படுத்தினார். மவ்லவி சாஹிபும் தமது கவலையை வெளிப்படுத்தி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கடிதம் எழுதினார். ஆனால் தம்முடைய உண்மையான நல்லடியார்களுக்கு இறைவனால் எல்லாவிதமான ஆற்றல்களையும் வழங்க முடியும். இதற்குச் சான்றாக அமையும் விதத்தில் திருமணத்திற்கான எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுவேன் என ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு உறுதி அளித்திருந்த இறைவன் அவர்களுடைய உடல் நலிவு, வயது முதிர்வு ஆகியவற்றை மீறிய ஆற்றலை அவர்களுக்கு வழங்கினான். அதன் காரணமாக அவர்கள் விட்டுச் சென்ற மூன்று ஆண்மக்களும், இரண்டு பெண்மக்களும் இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இறைவன் அவர்கள் மீது அருள் பாலித்து நீண்ட நாள் வாழச் செய்வானாக!

(தொடரும்...)

*(6 -ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

58. நாம் ஒருவருடைய இறப்பையோ அல்லது இழப்பையோ கேள்விப்படும் போது என்ன கூற வேண்டும்?

‘இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்’ என்று கூற வேண்டும். இதன் பொருள்: ‘நிச்சமாக நாம் அல்லாஹ்வுக்காகவே வாழ்கிறோம். மேலும் நாம் நிச்சயமாக அவனிடமே திரும்புபவர்களாகவே இருக்கிறோம்’ என்பதாகும்.

59. ‘தும்மல்’ வந்தவுடன் என்ன கூற வேண்டும்?

தும்மிய பின்பு ‘அல்ஹம்துலில்லாஹ்’ (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!) என்று கூற வேண்டும்.

60. முஸ்லிம் பண்டிகைகளின் பெயர்களைக் கூறுக:

முஸ்லிம்களுக்கு இரண்டு பெருநாட்கள் உள்ளன. ஒன்று ரமலான் மாதம் முடிவடைந்தவுடன் கொண்டாடப்படும் ‘ஈதுல் ஃபித்ர்’ ஆகும்.



ஸம்ஸம் கிணறு

மற்றொன்று ‘ஈதுல் அழ்ஹா’ ஆகும். இந்தப் பண்டிகை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களை அல்லாஹ்வின் பாதையில் குர்பானி கொடுக்கத் துணிந்த தியாகத்தை நினைவு கூரும் பண்டிகையாகும்.

61. ஒருவர் தும்மியவுடன் அதனைக் கேட்பவர் என்ன கூற வேண்டும்?

‘யர்ஹமுகுமுல்லாஹ்’ (அல்லாஹ் உமக்கு அருள் செய்வானாக!) என்று கூற வேண்டும்.

62. ‘ஸம்ஸம்’ என்பது என்ன?

கஅபாவின் அருகிலுள்ள ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கிணறு ஆகும். தமது தாயாருடன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் தனியாக விடப்பட்டபோது, தாகத்தின் பிடியில் சிக்கித் தவித்த போது பூமியிலிருந்து பீறிட்டு வந்த நீரூற்றே இந்த கிணறு ஆகும். (தொடரும்...)

## அரபி மொழியின் சிறப்பு

அரபி மொழியில் இதயத்தை குறிக்க قلب ‘கல்ப்’ என்ற சொல்



பயன்படுத்தப்படுகிறது. இந்த சொல் ஏதாவது ஒன்றைச் சுற்றி வரச் செய்யும் ஒன்றைக் குறிக்கிறது. உடலின் இரத்த ஓட்டம் இதயத்தைச் சார்ந்திருக்கிறது என்பதை இப்போது நாம் அறிகின்றோம். மிக நீண்ட கால முயற்சிகளுக்கும் ஆய்விற்கும் பிறகு தற்போதைய கண்டுபிடிப்புகள் இரத்த ஓட்டம் என்ற நிகழ்வின் உண்மைத்தன்மையை வெளியிட்டுள்ளன. எனினும் இஸ்லாத்தில் இதயத்தைக் குறிப்பதற்காக قلب ‘கல்ப்’ என்ற சொல் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் இந்த உண்மை கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பதுடன் பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 261 ஆங்கிலப் பதிப்பு)

# நாயிடமிருந்து விசுவாசத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:



ஒரு யூதரைப் பற்றிய கதை கூறப்படுகிறது. அவர் இஸ்லாத்தைத் தழுவினார். சில நாட்களுக்குப் பிறகு அவர் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டி வந்தது. அவர் பட்டினியால் வாடினார். பசியால் அவதியுற்றார். அவர் மற்றொரு யூதருடைய விட்டிற்குச் சென்று உதவி கேட்டார். அந்த யூதர் புதிதாக முஸ்லிமான அந்த யூதருக்கு நான்கு ரொட்டிகளைக் கொடுத்தார்.

அவர் ரொட்டிகளைப் பெற்றுக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தார். ஒரு நாய் அவரைப் பின் தொடர்ந்து வந்தது. ஒருவேளை இந்த நாயிற்கு ரொட்டிகளில் ஏதேனும் பங்கு இருக்கக்கூடும் என்று எண்ணிய அந்த முஸ்லிம் ஒரு ரொட்டியை அந்த நாயிடம் வீசி விட்டு தொடர்ந்து நடக்கலானார். நாய் அந்த ரொட்டியை உடனே விழுங்கி விட்டு மீண்டும் அவரைப் பின்தொடர்ந்து வந்தது. எனவே அவர் ரொட்டிகளில் பாதி பங்கு அதற்கு இருக்கக்கூடும் என்று எண்ணியவாறு மற்றொரு ரொட்டியையும் நாயிடம் வீசினார். அந்த ரொட்டியையும் நாய் தின்று விட்டு மீண்டும் அவரைப் பின்தொடர்ந்தது. நாய் தன்னை விடாமல் பின்தொடர்வதைக் கண்ட இவர் ஒருவேளை நான்கில் மூன்று பங்கு அதற்குரியதாக இருக்கலாம் என்று எண்ணியவாறு மூன்றாவது ரொட்டியை அதனிடம் வீசினார். ஆனால் நாய் அதனைத் தின்ற பிறகும் அவரை விட்டபாடில்லை.

கோபமடைந்த அவர் அந்த நாயைப் பார்த்து கூறினார்: ‘‘நீ மிகக் கெட்டவன். நான் யாசித்து நான்கு ரொட்டிகளைப் பெற்றேன். அவற்றுள் மூன்றை நீ தின்று விட்டாய். அதற்குப் பிறகும் என்னை விட மாட்டேன் என்கிறாய்.’’

அந்த சமயத்தில் அல்லாஹ் அந்த நாயிற்கு பேசும் சக்தியை வழங்கினான். அது கூறியது: ‘‘நான் ஒன்றும் கெட்டவனில்லை. நான் எவ்வளவுதான் பசியால் வாடினாலும் உணவிற்காக எனது எஜமானின் வீட்டைத் தாண்டி வேறு எங்கும் செல்வதில்லை. நீதான் கெட்டவன். ஏனெனில் இரண்டு மூன்று நாட்கள்தான் பசியால் வாடியுள்ளாய். அதற்குள் ஒரு நிராகரிப்பாளரின் வீட்டிற்கு யாசகம் கேட்டு வந்து விட்டாய்!’’

நாயின் இந்தப் பதிலைக் கேட்ட முஸ்லிம் தனது நிலையை எண்ணி மிகவும் பச்சாதாபப்பட்டார். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 450)

# இறைஇருப்பு, இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிகள்

மவ்லவி முஹம்மது கரீமுத்தீன் ஷாஹித் சாஹிப்
(சத்ர், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்)

1



**தமிழாக்கம்: இப்னு வஸீம், காதியான்**

وَالَّذِيۡنَ جَاهَدُوۡا فِيۡنَا لَنَهۡدِيَنَّهُمۡ سُبُلَنَا ؕ وَاِنَّ اللّٰهَ لَمَعَ الۡمُحۡسِنِيۡنَ

பொருள்: மேலும், எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். மேலும், நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! கண்ணியத்திற்குரிய அவையோரே! இறைவனைப் பற்றிய ஞானம் அல்லது அவனை அடையாளம் காண்பதற்கு ஒரு போராட்டம், முயற்சி மற்றும் கடின உழைப்பின் தேவை உள்ளது என்பது இந்தத் திரு வசனத்திலிருந்து நமக்குத் தெரிய வருகிறது.

உலகின் ஒவ்வொரு பணிக்கும் ஒரு கடின உழைப்பும் கடும் முயற்சியும் தேவைப்படுகிறது. கடினமாக உழைக்காமலும் முயற்சி செய்யாமலும் எந்தப் பணியையும் நிறைவேற்ற முடியாது. பிறகு, இறைஞானத்தைப் பெறுவதற்கு, எந்த அளவுக்குக் கடினமாக உழைக்க வேண்டிய தேவை இருக்கும்! இது குறித்து சுயமே அல்லாஹ்வின் மறையான திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

يٰۤاَيُّهَا الۡاِنۡسَانُ اِنَّكَ كَادِحٌ اِلٰى رَبِّكَ كَدۡحًا فَمُلٰقِيۡهِ

பொருள்: மனிதனே! நிச்சயமாக நீ உனது இறைவனை நோக்கிக் கடினமாக உழைத்ததன் பின்னர் அவனைச் சந்திப்பவனாக இருக்கின்றாய். (84:7)

இவ்வாறே, இதுவும் ஓர் உண்மையாகும். அதாவது,

لَا تُدۡرِكُهُ الۡاَبۡصَارُ وَهُوَ يُدۡرِكُ الۡاَبۡصَارَ ۚ وَهُوَ اللَّطِيۡفُ الۡخَبِيۡرُ

பொருள்: பார்வைகள் அவனை அடைய முடியாது. ஆனால், அவன் பார்வைகளை அடைகிறான். அவன் நுட்பமானவனும், யாவற்றையும் அறிந்தவனுமாவான். (6:104)

இந்தத் திருவசனத்தில் இந்த விஷயம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதாவது, இறைவன் மறைவிலும் மறைவானவன். மனித அறிவு சுயமாக இறைவன் வரைச் சென்றடைய முடியாது. அதில் இந்த அளவு ஆற்றல் எங்கே இருக்கிறது? எனவே, அதற்கு நேர்மாறாக, இறைவன் தானே அடியானுக்கு அருகில் வருகின்றான். மேலும், அவனுக்குத் தனது இல்ஹாம், வேதம் ஆகியவற்றின் மூலமாக தன்னைப் பற்றி தானே தெரியப்படுத்துகிறான். அவன் தனது இயலாத அடியார்களுக்குத் தானே ஆதரவாகின்றான். தானே அடியானின் கைகளைப் பிடித்துக் கொள்கிறான்.

எனவே, இவ்வகையில் நாம் கூறலாம்! இறைவன், 'அனல் மவ்ஜூத் - நான் இருக்கின்றேன்' என்று கூறி சுயமே தனது இருப்புக்கான சான்றளிப்பது இறை ஞானத்தைப் பெறுவதற்கான முதல் வழிமுறையாகும். அதற்கான பெரும்பாலான உதாரணங்கள் நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) உடைய வாழ்கை வரலாற்றில் நமக்குக் கிடைக்கின்றன. நேரத்தின் அருமையைக் கருத்திற் கொண்டு நான் வெறும் இரண்டு உதாரணங்களை மட்டும் முன்வைக்கிறேன்.

(1) சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى

பொருள்: அரேபிய தூதர் (ஸல்) அவர்களே! நாம் உம்மை, எம்மைத் தேடுவதில் உலகம் மற்றும் அதில் இருப்பவற்றை விட்டும் (விலகி) தொலைந்து போனவராக இருக்கக் கண்டோம். எனவே, நாம் சுயமே முன் வந்து வழிகாட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டோம். (93:8)

முழுத் திருக்குர்ஆனும் இந்தக் கண்டறியும் முயற்சி மற்றும் தேடலுக்கான பதிலாக ஆகி விட்டது. அது உலகம் இருக்கும் வரை மனித குலத்தின் நேர்வழிக்கும் வழிகாட்டலுக்குமான முழுமையான வாழ்வாதாரமாகும்.

(2) இரண்டாவது உதாரணம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து இவ்வாறு கிடைக்கப் பெறுகிறது: அன்னார் (அலை) தமது குடும்பத்தாருடன் மத்யனிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது, வழியில் அவர்களுக்கு ஓரிடத்தில்

தீச்சுடர் தென்பட்டது. இதைப் பற்றி திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

فَلَمَّآ اَتٰهَا نُوْدِیَ مِنْ شَاطِئِ الْوَادِ الْاَیْمَنِ فِی الْبُقْعَةِ الْمُبٰرَکَةِ مِنَ الشَّجَرَةِ اَنْ یّٰمُوْسٰۤی اِنِّیْۤ اَنَا اللّٰهُ رَبُّ الْعٰلَمِیْنَ ۙ

பொருள்: இறையடியார் மூஸா நெருப்பிடம் வந்த போது, அருள் செய்யப்பட்ட இடத்தின் ஓர் அருளுக்குரிய பகுதியிலிருந்த ஒரு மரத்திலிருந்து, 'மூஸாவே! நிச்சயமாக நானே எல்லா உலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்' என்று குரல் கொடுக்கப்பட்டது. (28:31)

இதுவே அல்லாஹ், 'அனல் மவ்ஜூத் - நான் இருக்கின்றேன்' என்று கூறி தனது அடியானைத் தானே பிடித்துக் கொள்வதும் தன்னைப் பற்றி தானே தகவல் கொடுப்பதுமாகும். இந்த விஷயத்தை நாம் இப்படியும் எடுத்துக் கூறலாம்: அதாவது, ஆயிரக்கணக்கான திரைகளில் மறைந்திருந்தும், அவன் தன் அடியார்களுடன் உரையாடி, தான் இருக்கிறான் என்பதற்கான சான்றை, தானே தருகிறான் என்பதை விடப் பெரிய, தெளிவான மற்றும் பிரகாசமான, இறை ஞானத்திற்கான வழிமுறை வேறெதுவும் இல்லை.

எந்த முகத்தையும் பார்க்காமல் உள்ளம்
எவ்வாறு ஈர்க்கப்படும்?

எப்படி ஒருவர் கற்பனை அன்பருக்கு
உள்ளத்தைக் கொடுப்பார்?

பார்க்க முடியவில்லை என்றாலும்
உரையாடலாவது (குரலே) வேண்டுமே!

நேசத்திற்குறியவனின் அழகின்
அடையாளங்களாவது வேண்டுமே!

கண்ணியத்திற்குரியோரே! அல்லாஹ்வைப் பற்றிய ஞானத்திற்கான இரண்டாவது வழிமுறை, அவன் தன் நல்லடியார்களுக்கு மறைவான விஷயங்களை வெளிப்படுத்தி தனது இருப்பிற்கான சான்றைத் தருவதாகும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

عٰلِمُ الْغَیْبِ فَلَا یُظْهِرُ عَلٰی غَیْبِهٖۤ اَحَدًا ۙ اِلَّا مَنِ ارْتَضٰی مِنْ رَّسُوْلٍ

பொருள்: இறைவன் மறைவானதை அறிபவன் ஆவான். அவன் தனது மறைவான ஞானத்தைத் தான் அந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுத்த தனது அடியாரைத் தவிர எவருக்கும் வெளிப்படுத்துவதில்லை. (72:27,28)

நபிமார்களின் வரலாற்றில் இதற்கான ஆயிரக் -கணக்கான உதாரணங்கள் கிடைக்கின்றன. திருக்குர்ஆனிலோ அதன் குவியல் உள்ளது. உதாரணமாக, அல்லாஹ் கூறுகிறான்:

وَاِذَا الْعِشَارُ عُطِّلَتْ ۖ

பொருள்: (பத்து மாதம் கருக் கொண்ட) பெண் ஒட்டகங்கள் கைவிடப்படும். ஒரு காலம் வரவிருக்கிறது. (81:5)

அதாவது, அவற்றிடம் வேலை வாங்கப்பட மாட்டாது. நபிமொழிகளில் இதற்கான விளக்கமும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அதாவது, நெருப்பால் இயங்கக்கூடிய சவாரிகள் வெளிப்படும். அவற்றில் பல விளக்குகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் இருக்கும் முதலியவை...

ஆக, இரயில் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது.



இவ்வாறே, அல்லாஹ் கூறுகிறான்:

وَاِذَا الصُّحُفُ نُشِرَتْ ۖ

பொருள்: நூல்களும் இலக்கியங்களும் பெருமளவில் வெளியிடப்படும். (81:11)

மேலும், கூறுகிறான்:

وَاِذَا النُّفُوْسُ زُوِّجَتْ ۖ



பொருள்: மனித குலத்தின், ஒருவர் மற்றவருடனான தொடர்புகள் அதிகரிக்கப்படும். (81:8)

இந்த மறைவான விஷயங்கள் அனைத்தும் நமது இக்காலத்தில் நிறைவேறுகின்றன.

கண்ணியத்திற்குரிய அவையோரே! இஸ்லாம் எத்தகைய மார்க்கம் என்றால், ஒவ்வொரு காலத்திலும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய எத்தகைய மக்கள் பிறந்து கொண்டே இருக்கிறார்கள் என்றால், அல்லாஹ் அவர்களுக்குத் தனது மறைவான செய்திகளை வெளிப்படுத்தி தனது இருப்பிற்கான சான்றைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றான்.

ஆக, நமது இக்காலத்தில் இறைவன் புறமிருந்து அனுப்பட்ட தூதரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு அன்னார் மிகவும் பலவீனமான, ஆதரவற்ற மற்றும் பெயர் அறியப்படாத நிலையில் இருந்த போது இவ்வாறு முன்னறிவிப்பு வழங்கப்பட்டது:

یَاْتِیْکَ مِنْ کُلِّ فَجٍّ عَمِیْقٍ یَنْصُرُکَ رِجَالٌ نُّوْحِیْ اِلَیْهِمْ مِنَ السَّمَآءِ

பொருள்: ஒவ்வொரு வழியில் இருந்தும் மக்கள் உம்மிடம் வருவார்கள். மேலும், எந்த அளவு அதிகமான

எண்ணிக்கையில் வருவார்கள் என்றால், அவர்கள் வரக்கூடிய வழிப்பாதைகள் ஆழமாகி விடும். எத்தகைய மக்கள் உமக்கு உதவி புரிவார்கள் என்றால், அவர்களின் உள்ளத்தில் நாமே அதற்காக எழுச்சியூட்டுவோம். (பராஹீனே அஹ்மதிய்யா)

எனவே, காதியானைப் போன்ற தொலைதூரத்தில் அமைந்திருக்கும், பெயர் அறியப்படாதிருந்த கிராமத்தை நோக்கி மக்கள் பெருமளவில் வருவது, இந்தச் சிறிய கிராமம் முழு உலகிலும் புகழ் பெற்று விடுவது, ஆயிரக்கணக்கான மனிதர்கள் இங்கு இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொள்வது ஆகியவை வழக்கமான அல்லது சாதாரணமான விஷயம் ஒன்றும் அல்ல. மாறாக, இது இறைவனின் ஒரு மகத்துவமிக்க அடையாளம் ஆகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்கள் சுயமே இவ்வாறு கூறுகிறார்கள்:

நான் வறியவனாக, ஆதரவற்றவனாக,
பெயர் அறியப்படாதவனாக,
திறமையற்றவனாக இருந்தேன்.

காதியான் எங்கு இருக்கிறது என்பதை
எவரும் அறிந்திருக்கவில்லை.

மக்கள் இந்தப் பக்கம்
ஏறெடுத்தும் பார்த்திருக்கவில்லை.

என்னைப் பற்றியும்
எவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

இப்போது எப்படி உலகமே
இதன் பக்கம் திரும்பியுள்ளது என்பதையும்,
ஒரு சிறப்பான திரும்புமிடமாக
இந்தக் காதியானே ஆகியுள்ளது என்பதையும்,
நீங்கள் பார்க்கிறீர்கள்.

கண்ணியத்திற்குரிய அவையோரே! சமீபத்தில், இந்த வருடமே செப்டம்பர் 30, 2022 அன்று ஜுமுஆ நாளில் நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அமெரிக்காவின் ஒரு நகரமான ஸியோனில் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசலைத் திறந்து வைத்தவாறு, அல்லாஹ்வின் ஒரு மகத்துவமிக்க அடையாளத்தின் விபரத்தை எடுத்துரைத்தார்கள். அது அல்லாஹ் வழங்கும் மறைவான ஞானத்தை உள்ளடக்கியதாக இருந்தது. மேலும், அல்லாஹ்வின் இருப்புக்கு ஒரு மாபெரும் சான்றாக இருந்தது. அது என்னவென்றால், கிறிஸ்தவர்களில் டூயீ என்பவன் அமெரிக்காவில் நபித்துவ வாதம் புரிந்தான். தனது அசுத்தமான இந்தச் சொற்களை வெளியிட்டான்:

'இஸ்லாம் உலகத்திலிருந்து அழிந்து போகக் கூடிய அந்த நாள் விரைவில் வர வேண்டும் என்று நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறேன். இறைவா! நீ அவ்வாறே செய்வாயாக! இறைவா! இஸ்லாத்தை அழித்து விடுவாயாக!' (நவூதுபில்லாஹ்)


அப்போது அதற்குப் பதிலடியாக நம் இமாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மட்டுமே இவ்வாறு பிரசுரம் வெளியிட்டார்கள்:

நபித்துவ வாதம் புரிபவரே! என்னோடு வந்து போட்டியிடுவீராக! நமது போட்டி துஆவினால் நடைபெறும். நம்மில் பொய்யர் முதலில் அழிய வேண்டும் என்று நாம் இருவரும் இறைவனிடம் துஆ செய்வோம். (டெலிகிராஃப் அமெரிக்கா ஜூலை 5, 1903)

ஆனால், அவன் ஆணவத்துடன் இவ்வாறு கூறினான்: 'நான் இந்த ஈக்களுக்கும் கொசுக்களுக்கும் பதில் அளிப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் எனது பாதத்தை அவற்றின் மீது வைத்தால், அவற்றை நசுக்கிக் கொன்று விடுவேன்.' (லீவ்ஸ் ஆஃப் ஹீலிங் எனும் டூயீயின் பத்திரிகை டிசம்பர் 1903)

ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 23 ஆகஸ்ட் 1903 இல் வெளியிட்ட அதே பிரசுரத்தில் இந்த விஷயத்தை வெளியிட்டார்கள்:

"ஒருவேளை டூயீ போட்டியை விட்டு ஓடிவிட்டால், அப்போதும் அவரது சீயோன் மீது விரைவாக ஒரு பேரழிவு ஏற்படவிருக்கிறது என்பதை உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள்.





இறைவா! முழுமையான இறைவா! இந்தத் தீர்ப்பை விரைவாக அளிப்பாயாக! டூயீயின் பொய்யை மக்களுக்கு மீது வெளிப்படுத்தி விடுவாயாக!”


அதற்குப் பிறகு என்ன ஆனது என்பதைக் கேளுங்கள்! ஏழு கோடி ரூபாய் வைத்துக் கொண்டு இளவரசர்களைப் போன்று வாழ்ந்து வந்த அவனுக்கு அவன் மனைவியும் மகனும் எதிரிகளாகி விட்டார்கள். மேலும், அவன் நெறி தவறிப் பிறந்தவன் என்று அவன் தந்தை பிரசுரம் வெளியிட்டார். கடைசியில், அவனுக்குப் பக்கவாதம் ஏற்பட்டது. பிறகு, துக்கம் தாளாமல் பைத்தியம் ஆகி விட்டான்.

கடைசியில், இறைவன் தன் புறமிருந்து அனுப்பப்பட்டவருக்கு, முன்னரே தகவல் அளித்ததற்கு ஏற்ப, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிப்ரவரி 10, 1907 இல் வெளியிட்ட பிரசுரத்தில் இவ்வாறு வெளியிட்டதற்கு ஏற்ப, அதாவது, இறைவன் கூறுகிறான்:

‘நான் ஒரு புதிய அடையாளத்தை வெளிப்படுத்துவேன். அதில் மகத்துவமிக்க வெற்றி இருக்கும். அது முழு உலகிற்கும் ஓர் அடையாளமாக இருக்கும்.’ அதற்கு ஏற்ப, மார்ச் 1907 இல் மிகவும் பரிதாபமான முறையிலும் வேதனையோடும் அழிந்து போய் இறையிருப்புக்கு சான்றளித்துச் சென்று விட்டான்.

இந்தக் கிறிஸ்தவ உலகத்தின், பழைய மற்றும் புதிய உலகம் ஆகிய இரண்டின் மீதும் ஹுஸூர் (அலை) அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

- ☛ இஸ்லாம் எத்தகைய மார்க்கம் என்றால், ஒவ்வொரு காலத்திலும் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய அத்தகைய மக்கள் பிறந்து கொண்டே இருக்கிறார்கள் என்றால், அல்லாஹ் அவர்களுக்குத் தனது மறைவான செய்திகளை வெளிப்படுத்தி தனது இருப்பிற்கான சான்றைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றான்.
- ☛ இறை ஞானத்தைப் பெறுவதற்கான ஒரு வழிமுறை, இறை வல்லமை வெளிப்பட்டதைப் படிப்பதும் பார்ப்பதும் ஆகும். உலகங்களின் படைப்பு, அதன் உறுதிவாய்ந்த அமைப்பு மற்றும் சிறப்புகள் மீது நாம் ஆழ்ந்து கவனம் செலுத்துகையில், அல்லாஹ்வின் இருப்பு, அவனது கம்பீரம், பளிச்செனத் தெரியும் ஆற்றல் ஆகியவை எவ்வாறு வெளிப்படுகின்றன என்றால், இறைவனைத் தவிர மற்றவர் எவரோடும் இந்த விஷயங்களைத் தொடர்புபடுத்துவதற்கு எவரும் துணிய முடியாது.



கண்ணியத்திற்குரிய அவையோரே! இறை ஞானத்தைப் பெறுவதற்கான ஒரு வழிமுறை, இறை வல்லமை வெளிப்பட்டதைப் படிப்பதும் பார்ப்பதும் ஆகும். உலகங்களின் படைப்பு, அதன் உறுதிவாய்ந்த அமைப்பு மற்றும் சிறப்புகள் மீது நாம் ஆழ்ந்து கவனம் செலுத்துகையில், அல்லாஹ்வின் இருப்பு, அவனது கம்பீரம், பளிச்செனத் தெரியும் ஆற்றல் ஆகியவை எவ்வாறு வெளிப்படுகின்றன என்றால், இறைவனைத் தவிர, மற்றவர் எவரோடும் இந்த விஷயங்களைத் தொடர்புபடுத்துவதற்கு எவரும் துணிய முடியாது.

ஆக, அறிவாளிகளுக்கு அழைப்பு விடுத்தவாறு திருக்குர்ஆன் கூறுகிறது:

وَلِلّٰهِ مُلۡكُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ‌ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَىۡءٍ قَدِيۡرٌ ‏
اِنَّ فِىۡ خَلۡقِ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ وَاخۡتِلَافِ الَّيۡلِ
وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّاُولِى الۡاَلۡبَابِ ۚ

பொருள்: வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. மேலும், அல்லாஹ் எல்லாவற்றிற்கும் முழுமையான ஆற்றல் பெற்றவன் ஆவான். வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவும் பகலும் மாறிமாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அடையாளங்கள் உள்ளன. (3:190,191)

அதாவது, இது வெறும் தற்செயலின் விளைவல்ல. மாறாக, அதற்குப் பின்னால் உறுதியான மற்றும் ஒருங்கமைக்கப் பெற்ற திட்டம் ஒன்று உள்ளது.

(தொடரும்)

# ஹஸ்ரத் ஈசா நபி (அலை) தம் உடலுடன் வானத்துக்குச் சென்றுள்ளார் என்று நம்புவது இறைத் தூய்மைக்குக் களங்கமாகும்.

சமய உலகில் முஸ்லிம்களுள் எல்லாப் பிரிவினரும், கிறித்தவ உலகில் எல்லாப் பிரிவினரும் ஈசா நபி (அலை) தம் உடலுடன் வானில் வாழ்கிறார் என்றும், அவரே மீண்டும் இப்பூவுலகுக்கு வருவார் என்றும் நம்புகின்றனர். ஆனால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டும் அவர் வானிற்குச் செல்லவில்லை என்றும், தம் இஸ்ரவேல் மக்களைத் தேடி காஷ்மீர் சென்று அங்கே வாழ்ந்து மரணித்தார் என்றும் நம்புகிறது.

ஒருவர் உடலுடன் வானுக்குச் செல்வது இறைத் தூய்மைக்குக் களங்கம் விளைவிப்பதாகும் என்பதைத் திருக்குர்ஆனின் சில வசனங்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளேன். திருக்குர்ஆனில் 17/94 –வது வசனத்தில், ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம், அவர்களின் சமுதாயத்தினர் கேட்டதாவது, ''நீர் வானத்துக்கு ஏறிச் செல்ல வேண்டும். நாங்கள் படிக்கத்தக்க ஒரு நூலை எங்களுக்குக் கொண்டு வராத வரை நீர் வானத்துக்குச் சென்றதையும் நாங்கள் நம்ப மாட்டோம். நீர் கூறுவீராக: என் இறைவன் தூயவன்; நான் ஒரு மனிதனாகிய தூதரேயன்றி வேறு அல்லன்'' என்று வருகிறது.

இதில் ஒரு மனிதத் தூதரால் வானத்துக்கு இந்த உடலுடன் ஏறிச் செல்ல முடியாது என்பது எளிதில் விளங்குகிறது. எனவே ஈசா நபியும் ஒரு மனிதத் தூதர் என்பதால் அவரும் வானுக்குச் செல்லவில்லை என்று விளங்கிக் கொள்கிறோம். ஆனால், முஹம்மது நபி (ஸல்) அவர்கள், அம்மக்களிடம் கூறிய பதிலில், 'சுப்ஹான ரப்பீ – என் இறைவன் தூயவன்' என்று கூறியதாக வருவது என் சிந்தனையைத் தூண்டியது. வானத்துக்குச் செல்வதற்கும் சுப்ஹான் என்பதற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது என்று தெரிந்தது. திருக்குர்ஆனில் சுப்ஹான் எனும் சொல் வரும் வசனங்கள் அத்தொடர்பை விளக்கியது.

1) "அவர்கள் வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பு பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பர். எங்கள் இறைவா! நீ இதனை வீணாகப் படைக்கவில்லை; நீ தூயவன். எனவே நீ எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக எனக் கூறுவர்." (திருக்குர்ஆன் 3:192)

இதில் வானங்களையும் பூமியையும் அல்லாஹ் வீணாகப் படைத்துள்ளான் என்று எண்ணுவது அல்லாஹ்வின் தூய்மைக்கு களங்கம் கற்பிப்பதாகும். நரகத் தண்டனைக்கு உரியதாகும் என்று கூறப்பட்டுளள்து.

2) ''மர்யமின் மகன் ஈசாவே! நீர் மக்களிடம் அல்லாஹ்வையன்றி என்னையும் என் தாயையும் இரண்டு கடவுள்களாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினீரா என அல்லாஹ் கேட்டபோது, அவர், நீ தூயவன் எனக் கூறினார்." (திருக்குர்ஆன் 5:117)

இதில் ஈசா நபியையும் அவருடைய தாயையும் இரு தெய்வங்களாக ஆக்கிக் கொள்வது இறைவனின் தூய்மைக்கு களங்கம் கற்பிப்பதாகும். எனவே அவன் அதிலிருந்து தூயவன் ஆவான் என்ற கருத்து கூறப்பட்டுள்ளது.

3) "அவர்கள் அல்லாஹ்வையன்றி தங்கள் சமய அறிஞர்களையும் துறவிகளையும் இவ்வாறே மர்யத்தின் மகன் மஸீஹையும் தங்கள் கடவுள்களாக ஆக்கிக் கொண்டனர்.... அவர்கள் வைக்கின்ற இணையை விட்டும் அவன் தூயவன்." (திருக்குர்ஆன் 9:31)

இதில் இறைவனுக்கு வைக்கின்ற இணையை விட்டும் அவன் தூயவன் என்று அந்த வசனமே கூறுகிறது.

4) "(வானங்கள், பூமி) ஆகிய அவ்விரண்டிலும் அல்லாஹ்வையன்றி வேறு கடவுளர்கள் இருந்திருப்பின் அவை இரண்டும் பெருங்குழப்பத்திற்கு இரையாகி அழிந்திருக்கும். எனவே அரியணைக்குரிய இறைவனாகிய அல்லாஹ் எல்லாக் குறைகளிலிருந்தும் அவர்கள் கூறுபவற்றிலிருந்தும் தூயவன்." (திருக்குர்ஆன் 21:23)

இதில் வானங்கள், பூமி ஆகியவற்றில் பல கடவுள்கள் இருக்கின்றனர் என்று கூறும் குறைகளிலிருந்து அல்லாஹ் தூயவன் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட வசனங்களிலிருந்து நாம் விளங்குவது, அல்லாஹ்வுக்கு களங்கம் விளைவிக்கும் ஒரு செயல் கூறப்பட்டால் அல்லாஹ் சுப்ஹான் என்று கூறுவதன் மூலம் அதனை மறுப்பதைக் காணலாம். இந்த அளவுகோலின் அடிப்படையில் நான் முதலில் கூறிய 17:94 வசனத்தைப் பார்த்தால், ஒரு மனிதத் தூதர் தம் உடலுடன் வானுக்கு ஏறிச் செல்வது என்பது இறைவனின் தூய்மைக்குக் களங்கம் கற்பிப்பதாகும் என்று விளங்குகிறது. இல்லை ஈசா நபி வானுக்கு உயர்த்தப்பட்டு அங்கு இருக்கிறார் என்று கூறுவதாக இருந்தால், சுப்ஹான் என்று வரும் பிற வசனங்களின் அடிப்படையில்,

"இறைவன் வானங்களையும் பூமியையும் வீணாகப் படைத்துள்ளான் (43:192) என்றும், ஈசா நபியும் அவர் தாயாரும் இரு தெய்வங்கள் (9:31) என்றும், யூத, கிறித்தவ சமய அறிஞர்களும், துறவிகளும், மர்யத்தின் மகன் ஈசாவும் கடவுள் (21:23) என்றும், வானங்களிலும் பூமியிலும் அல்லாஹ்வையன்றி வேறு கடவுள்கள் இருக்கின்றர் என்றும் நம்ப வேண்டியது வரும்.

அல்லாஹ், ஈசா நபி வானத்தில் உயிருடன் இருக்கிறார் என்ற நம்பிக்கையிலிருந்து உங்களையும் என்னையும் காப்பானாக. ஆமீன்.

**- A.P.Y. அப்துல் காதிர்**

*(11 -ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

முனா∴பிக்குகள் தாம் விரும்பும் எல்லா சாக்குப் போக்குகளையும் கூறுவர். சீர்திருத்தத்தையும் அமைதியையும் மேம்படுத்த அவர்கள் விரும்புவதால் தான் ஜமாஅத்தை விமர்சிப்பதாக கூறுவர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தீர்ப்பு தெளிவானது. எவர்கள் ஜமாஅத் அழிந்து விட்டது என்று கூறுவார்களோ அவர்களே மிகவும் அழிந்தவர்கள் ஆவர். அவர்கள் முனா∴பிக்குகளே ஆவர்.

மக்களின் நோக்கங்களை நம்மால் மதிப்பிட முடியாது. ஆனால் அவர்களின் செயல்கள் முனா∴பிக்குகளின் செயல்களாக இருந்தால் அவர்கள் தமது நோக்கமாக எதைக் கூறினாலும் அவர்கள் செய்வதை முனா∴பிகத் என்றே கூறவேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: அவர்களிடம் பூமியில் குழப்பம் விளைவிக்காதீர்கள் என்று கூறப்பட்டால் நாங்கள் சீர்திருத்தம் செய்பவர்களே என்று அவர்கள் கூறுகின்றனர். கவனமாகக் கேளுங்கள்! நிச்சயமாக இவர்களே குழப்பம் விளைவிப்பவர்கள். ஆனால் இவர்கள் (இந்த உண்மையை) உணர்வதில்லை. (திருக்குர்ஆன் 2-12,13)

அப்துல் ஹக்கீம் முர்தத் என்பவரும் ஜமாஅத்தில் ஹஸ்ரத் நூருத்தீன் உட்பட ஒரு சிலர் மட்டுமே நல்லவர்கள், மற்றவர்கள் கெட்டு விட்டனர் என்று எழுதினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'நீர்தான் கெட்டு விட்டீர். என்னுடைய ஜமாஅத்தில் சஹாபிகளைப் போன்றவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர்' என்று பதில் எழுதினார்கள். (அன்வாருல் உலூம் தொகுதி 10 பக்கம் 95)

முனா∴பிக்குகள் அல்லாஹ்வின் ஜமாஅத்தைப் பார்க்கும் போது கசப்புத்தன்மையும் வெறுப்பு மனப்பான்மையும் அவர்களிடம் ஏன் அதிகமாகின்றது? அவர்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் ஆகும். அல்லாஹ்வின் ஜமாஅத்தைப் பற்றி எதிர்மறையாகச் சிந்திப்பது அவர்களின் நோயின் அறிகுறியாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 'நம்பிக்கையாளர்கள் தமது சகோதரர் -களிடத்தில் உள்ள பெருவாரியான நன்மையைக் காண்கின்றனர். எனினும், "ஒரு முனா∴பிக்கிற்கு ஜமாஅத்துடன் உள்ள தொடர்பு நேசத்தின் அடிப்படையில் இருப்பதில்லை. எனவே அவர் இத்தகைய பலவீனங்களை ஜமாஅத்தில் காணும் போது 'இப்போது அவர்களிடமும் இந்தத் தவறுகளும் குறைகளும் இருப்பதைக் காண்கின்றோம்' எனக் கூறுகின்றார். இப்போது அவருக்குள் பிரிந்து செல்லும் உணர்வு உருவாகியிருப்பதால் தனது சொந்த ஜமாஅத்தையே படர்க்கையில் 'அவர்கள்' என்று விளித்து இப்போது அவர்களிடமும் இந்தத் தவறுகள் தோன்றி விட்டன என்று கூறுகிறார்." (குத்பாத்தே மஹ்மூது 5, ஆகஸ்ட் 1938, பக்கம் 498-499)

ஜமாஅத் வெற்றியடையும் போது ஒரு முனா∴பிக் அமைதியாக இருப்பார். ஏதாவது பின்னடைவு ஏற்பட்டால் 'நான்தான் சொன்னேனே' என்று மிக்க களிப்புடன் கூறுவார். இதிலிருந்து அவர்களின் நோக்கம் ஜமாஅத்தை சிறுமைப்படுத்துவதே என்பது தெளிவாகிறது. (குத்பாத்தே மஹ்மூது 5, ஆகஸ்ட் 1938 பக்கம் 502)

(தொடரும்...)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"மக்கள் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டவர்களாக இருப்பதை நீங்கள் காண்கின்றீர்கள். இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் மிகச் சிறந்தவர்களாக இருந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் மார்க்க அறிவைப் பெற்றுக் கொண்டால் அவர்கள் இஸ்லாத்திலும் மிகச் சிறந்தவர்களாக இருப்பர். மக்களிலே மிகவும் மோசமானவர் இரட்டை முகம் கொண்டவர் ஆவார். அவர் அவர்களிடம் ஒரு முகத்துடன் வருகிறார். மற்றவர்களிடம் மற்றொரு முகத்துடன் வருகிறார்."



(புகாரி ஹதீஸ் எண்: 3493)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam